மாதர் மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol-XIII. | Madras: February 1911. | No. 2.

புத்தகம் - கஙு. | சென்னப்பட்டணம்: பிப்ரவரிமீ 1911. | இலக்கம்-2.

விஜயநகரம் ராணியார்செய்த உபந்நியாசம்.

டிசம்பர்மீ 28உ யன்று அலஹாபாத்தில் மூர் சென்ட்ரல் காலேஜியிலுள்ள விஜயநகரம் மண்டபத்தில் பாரதமஹிளாபரிஷத் என்ற இந்திய மாதர்களின் 7-வது கூட்டம் கூடிற்று. அச்சமயத்தில் விஜயநகரம் ராணியார் சபைத் தலைமையை வகித்து பின் வருமாறு உபந்நியாசஞ் செய்தார்கள்:—

சகோதரிகளே! இச்சபைக்கு என்னைத் தலைவியாகயிருக்கும்படி கேட்டு அவ்விதமே என்னை நீங்கள் கௌரவப்படுத்திய தற்காக எனது மனப்பூர்ண வந்தனத்தை உங்களுக்கு அளிக்கின்றேன். பொது விஷயங்களைக் குறித்து இச்சபையில் யோசிக்க நாம் இப்படி சந்திக்கிறது எனக்கு அதிக மகிழ்ச்சியையுண்டாக்குகிறது.

இந்திய மாதர்களுக்கு கல்வி அவசியமானது. இது தற்சமயத்தில் இந்தியாவின் ஜனத்தொகையில் அதிக பாகமாயுள்ள இந்து மாதர்களுக்குள்ளும் மகமதிய மாதர்களுக்குள்ளும் அதிக விருத்தி யடையாமலிருப்பது அதிக விசனத்தை யுண்டாக்குகிறது. இந்திய மாதர்களில அநேகர் அஞ்ஞானத்தில் மூழ்கியிருந்தால் இத்தேசம எவ்விதம் முன்னுக்கு வரும்? ஒவ்வொரு தேசத்தாரும் விருத்தியடைந்து வருகையில் அவர்களுக்குச் சமமாக இத்தேசத்து மாதர்களும் இருக்கவேண்டுமல்லவா? இத்தேசத்து ஸ்திரீகள் தேர்ச்சியடைய வேண்டியதவசியமே. அறிவைப்புகட்டி வரும் நமது காருண்ய கவர்ன்மெண்டாரின் பாதுகாப்பினால் நமது தேசம் விருத்தியடைந்து வருகிறது. ஐம்பதுவருஷகாலமாய் ஆங்கிலக் கல்வி புருடர்களுக்கு காருண்ய கவர்ன்மெண்டாரால் போதிக்கப்பட்டு வருகிறது. இதன் உதவியால் இந்தியாவின் புத்திரர்கள் உயர்ந்த ஸ்திதிக்கு வந்து கொண்டேயிருக்கிறார்கள்; இந்தியாவின் புத்திரிகள் மாத்திரம் இருகைகளையும் விரித்துகொண்டு, மௌனமாயும், கீர்த்தியற்றவராயும் பார்த்துக்கொண்டிருக்க வேண்டுமா? இவர்களும் ஆண்களைப்போல் விருத்தியடைய வேண்டாமா?

ஒரு தேசத்தின் ஸ்திரீகளின் ஸ்திதியானது அதன் நாகரிகத்தைத்தெரிவிக்கும் என்று சொல்லப்படுகிறது. சில தேசங்களில் ஸ்திரீகள் குற்றேவல்

செய்துவருகிறார்கள். இன்னும் சில தேசங்களில் இவர்கள் பொம்மையைப் போல் நடத்தப்பட்டுவருகிறார்கள். இன்னும் சில தேசங்களில் ஸ்திரீகள் சாதாரண நகையைப்போல் மதிக்கப்படுகிறார்கள். ஆனால் அதிக நாகரிகம் பொருந்திய தேசத்திலே புருஷனுக்கு ஸ்திரீ உண்மையுள்ளவளாயும், நம்பிக்கையுள்ளவளாயும், பக்தியுள்ள சகியாகவுமிருக்கிறாள். இந்தியாவில் நாகரிகத்திற் கறிகுறியாக பெண்மையின் ஸ்திதி பலவிதமாயிருக்கின்றன. ஆனால் நமது சாஸ்திரத்தில் கூறியபடி கார்யேஷு மந்திரி, கர்மேஷு தாசி, போஜ்யேஷு மாதா, ஸயனேஷு ரம்பா, என்ற சம்ஸ்கிருத சுலோகத்தில் அடங்கியதைவிட மேலானதில்லை. "கணவனுக்குப் புத்திசொல்வதில் ராஜதந்திரி போலவும், காரியத்தில் ஊழியம் செய்கிறவள்போலவும், தனித்திருக்கும் போது தாயைப்போலவும், அந்தப்புறத்தில் தாசியைப்போலவும்" ஸ்திரீகளிருக்கவேண்டும். இவ்வித குணங்களைவிட மேலானது எவை?

இதன்படி நடப்பதும், செய்வதும் அசாத்தியமென்றும் நினைக்கக் கூடாது. சீதா, துரௌபதி, தமயந்தி, சந்திரமதி, முதலியவர்களின் சரித்திரங்களில் இவர்கள் மேற்கூறியவாறு நடந்ததாகத் தெரிகிறது. இப்பொழுதும் அவ்விதம் செய்துவருவது கூடாதகாரியமல்ல. ஸ்திரீகளின் தொழில் அவர்கள் தங்களை அலங்கரித்துக் கொண்டிருப்பது மாத்திரமல்ல; தனது நல்ல ஒழுக்கத்தாலும், சிறந்த குணத்தாலும், மனிதருக்கு உற்சாகம் உண்டாகும்படி தங்கள் அறிவை உபயோகிக்கவேண்டும். மேலும், தங்களது குழந்தைகள் சரியாய் வளர்ந்து நல் நடக்கையுள்ளவர்களாயிருக்கவும், ஸ்திரீகள் தங்கள் செய்கையிலும், புத்தி புகட்டுவதிலும், வெகு யோசனையுடன் யிருந்துவரவேண்டும். கிருக கிருத்தியங்களைச் சாமர்த்தியத்துடன் செவ்வனே செய்து பொறுமையுடன் தன்வீட்டை அலங்கரிக்கவேண்டும். ஸ்திரீயின் கடமைகள் வீட்டில் மாத்திரம் தானா? இல்லை, உலகத்துக்கும் சேர்ந்தவைகளே. நமது தேசத்தின் தற்கால ஸ்திதியை யோசிக்குமளவில் இந்திய சாதியாருக்கு சுறுசுறுப்பை பற்பல மார்க்கங்களில் உண்டாக்க சக்தியுடையவள் ஸ்திரீயே. சீர்திருத்தங்கள் உண்டாக வேண்டுமானால் இவர்கள் உதவி அத்தியாவசியம். அநேக சீர்திருத்தங்கள் நிறைவேறாமலிருப்பதற்குக் காரணம் ஸ்திரீகளுக்கு ஞானவிளக்கில்லாக் குறைதான். இவர்களுக்கு அக்குறை நீங்கினலொழிய அவைகள் நிறைவேறுவது கடினம். ஆகையால் ஸ்திரீகளுக்கு கல்வி அவசியம் புகட்டிவரவேண்டும்.

நமது குழந்தைகளுக்கு மதசசம்பந்தமாகவும் நீதி புகட்டும் விஷயமாகவும் எவ்வளவோ செய்யலாம். பாடசாலைகளில் கூட இவ்விதம் செய்ய முடியாது. நாமே நமது குழந்தைகளுக்கு மதப்பற்றையும், சன்மார்க்க விஷயம் முதலியவைகளையும் போதித்து வரலாம். பெரியோரிடத்தில் மரியாதையுள்ளவர்களாகவும், சுதேசாபிமான முள்ளவர்களாகவும் ராஜவிசுவாச முள்ளவர்களாகவும் குழந்தைகளைப் பழக்கி வரலாம். இன்னொரு முக்கிய விஷயம் ஆள்வோரும் ஆளப்படுவோரும் நேசமாயிருந்து வர இன்னும் அதிகமாக முயலலாம். இவ்விதம் செய்ய நாம் அடிக்கடி ஆங்கில மாதர்களுடன் கூடிக்குலாவிக்கொண்டு வரவேண்டும். அப்படிச் செய்துவந்தால் நாம் பற்பல விஷயங்களை யறிந்து கொள்வதுடன் இருவரும் அதிக நேசமுள்ளவர்களாவோம்.

சகோதரிகளே, பெருமாட்டிகளே, இப்பொழுது நாம் வீட்டிற்கும், தேசத்திற்கும் செய்யவேண்டிய சிலகடமைகளைச் சொன்னேன். அவை

களை நிறைவேற்றத் தான் ஜீவித்து வருகிறோமென்று எண்ணவேண்டும். அஞ்ஞானத்தை நீக்கிக்கொண்டுநமது ஸ்திதியைஉயர்த்திக்கொள்ளவேண்டும்.

நாம் முற்காலத்திய ஸ்திரீகளைப்போல் நடக்க முயலவேண்டும். புதிய எண்ணங்களை (அபிப்பிராயங்களை), அடைவதில் நமது பூர்விக தர்மாசாரங்களை நழுவவிடாதேயுங்கள். நாம் சாதுவானவர்கள், கற்புள்ளவர்கள், மனிதன் இஷ்டத்திற்கு விருப்பத்துடனும் விசுவாசத்துடனும் கீழ்ப்படிந்து நடப்பவர்கள். அன்னியருக்குபசரணை செய்பவர்கள். தர்மசிந்தையுள்ளவர்கள். தேவபத்தியுள்ளவர்கள, இவைகள் நம்மிடத்தில குடிகொண் டிருப்பதைப்பற்றி மிகச் சந்தோஷப்படுகிறேன். இவைகளில் எதாவதொன்று தவறிவிட்டால் மகாகொடியது. சரியான கல்வி யிருக்கும்பக்ஷத்தில் ஸ்திரீகள் விசுவாசமுள்ள மனைவிகளாகவும், அறிவுள்ள தாய்மார்களாகவும், ராஜ பக்தியுள்ளவர்களாகவும் ஈஸ்வரனிடத்தில் பக்தியுள்ளவர்களாகவு மிருப்பார்கள்.

பின்பு அடியில் வரும் தீர்மானங்கள் இந்திபாஷையில் தீர்மானிக்கப்பட்டன.

(1) தேசவிருத்திக்கு முக்கிய வழி பெண் கல்வி. இந்த சபையார் பெண் கல்வி விருத்தியடைய எல்லாரையும் கேட்டுக்கொள்ளுதல், (2) எழுதவும் படிக்கவும் மாத்திரம் பெண்களுக்குப் போதித்தல் போதாது. வீட்டுக்குரிய வேலைகளைச் சரிவரச் செய்யவும், வியாதியஸ்தரைக் கவனிக்கும் விதமும், தையல் முதலியவைகளும் போதிக்கப்படவேண்டும்.

அதிபாலிய விவாகம் எல்லாக் கெடுதல்களுக்கும் மூலாதாரமென்பது இச்சபையாரின் அபிப்பிராயம். இக்கெடுதியை நீக்க இத்தேசத்து நன்மையைக் கோருபவர்களுடைய கடமை. கோஷா வழக்கத்தையும், குழந்தைகள் ஆபரணங்கள் அணிவதையும் நீக்க வேண்டியதும் இச்சபையின் அபிப்பிராயம். இந்து கைம்பெண்களின் ஸ்திதி மிக்க பரிதாபமாயிருக்கிறது. அநேக கஷ்டங்களிலிருந்து அவர்களைக் காப்பாற்றவும் அவர்களுக்குக் கல்வி புகட்டவும் ஒரு ஆசிரமம் அவசியம்.

சர்வஜித்.

37-வது அத்தியாயம்.

எந்த சம்பாஷணையை கோபாலன் கேட்டுக்கொண்டிருந்தானோ அச்சம்பாஷணையில் வெளிப்பட்டதும் திடுக்கிட்டுச் செய்ததுமான அந்தப் பரம ரகசியத்தால் அவன் மனதில் உண்டான ஆச்சரியத்தையும் சந்தோஷத்தையும், நம்பிக்கையையும் பயத்தையும் விவரித்தெழுத என்வசத்தில் வார்த்தைகளில்லை. ஸர்வஜித் நிரபராதியென்பது ஸ்பஷ்டமாய் வெளியாய் விட்டது.

அவன் தப்பிக்கப்படலாமென்பது ஒருக்கால் சாத்தியமாகக்கூடும்; ஆயினும் பல இடையூறுகள் காரியானுகூலத்தைத் தடுத்து நின்றனவென்பதும் ஒப்புக்கொள்ள வேண்டியதாயிருந்தது. உண்மையில் பரம இரகசியத்தை யறிந்த கோபாலனது மனது பலவிதமான எண்ணங்களால் குழப்பத்தை யடைந்திருந்ததால், தான் தன தறைக்குச்சென்று தனது மனது அமைதியை யடைகிறவரையிலும் ஒரு ஸ்திரமான முடிவுக்குவரும் வரையிலும் சற்று நேரம் அங்கேயே இருத்தலே புத்தியென்று நினைத்தான்.

தன தறைக்குச் சென்று யோசிக்கலாயினன். முதலில் ஜில்லா அதிகாரியிடத்திற்சென்று தான் கேட்டதை யெல்லாம் சொல்லி ஸர்வஜித்தைத்தப்புவிக்கும்படி அவனுதவியை வேண்டலாமென்று உத்தேசித்தான். ஆனால் ஜில்லா அதிகாரி தான் சொல்லுவது யாதும் பிராந்தி என்று எண்ணிவிட்டால் என்னசெய்கிறது? ஜில்லா அதிகாரி பிரபு அநங்கனிடம் இக்கதையைச் சொல்லாமல் விடான்; உடனே அநங்கன் எல்லாவற்றையும் முழுப்பிரளியென்றே சொல்லிவிடுவான். அதிகாரி தன்னை நம்புவனா அல்லது பிரபு சொல்லுவதை நம்புவானா? பிரபுவைத்தான் நம்புவான். ஆகையால் அந்த யோசனை சரியல்லவென்று முடிவுசெய்தான்.

பிரபு புஷ்யமித்திரரோ இப்போது கோட்டையில் இல்லை; அவர் தன் புத்திரியோடு ஜயகாந்தன் மாளிகைக்குச் சென்றுவிட்டார்; இல்லாவிடில் கோபாலன் தான் கேட்டதை அவரிடம் சொல்லியிருப்பான். ஆயினும் அவர் சர்வஜித்தை தூக்கில் போடுவதற்கு முந்தி அவனுடன் சிறிது நேரம் பேசிவிட்டுப்போக மறுபடி கோட்டைக்கு வருவதாகச் சொல்லியிருந்தார். அவர் திரும்பி வருகிறவரையில் கார்த்திராமல் தானே ஜயகாந்தன் மாளிகைக்குச்சென்று என் உண்மைசொல்லி விடக்கூடாது என்று ஆலோசித்தான். ஐயோ! அவரும் மற்றவர்களைப்போல் தான் சொல்லுவதை பிராந்தி என்று எண்ணிவிட்டால் என்னசெய்வது? அப்படியே அவர் நம்பிக்கை கொண்டாலும் அதை எப்படி நிரூபிப்பது? தான் ஒளிந்து ஒட்டுக்கேட்டதாக அவரிடத்தில் சொல்லவேண்டிவரும். தான் ஒட்டுக்கேட்டதாகத் தெரிந்துகொண்டால் உடனே தன்னை யோக்கியதை யில்லாதவனென்று நிச்சயித்து விடுவார். யோக்கியதை யில்லாதவனென்று எண்ணுகிறவர் தன் வார்த்தைகளில் எப்படி நம்பிக்கை வைப்பார்? எப்படியிருந்தாலும் பிரபு அநங்கனும் வரதனும் கோபாலன் சொல்லுவதை உண்மையென்று ஒத்துக்கொண்டாற்றானே அவர் ஸர்வஜித்தின் மரணதண்டனையைத் தவிர்க்கக்கூடும்? இவ்விஷயத்தில் மலையதிபதிகளைக் கெஞ்சினால் அவர்கள் பெரியமனது வைத்து ஸர்வஜித்தைக் காப்பாற்றும்பொருட்டு உண்மையை வெளியிடுவார்களென்று எண்ணவோ சிறிதும் இடமில்லை.

இப்படி ஒன்றன் பின்னொன்றாய் எதிர்க்கும் யோசனைகளாலும் ஆக்ஷேபங்களாலும் கோபாலன் மனது குழம்பிக்கொண்டிருந்தது; ஒரு அருமையான உயிரைக்காப்பாற்றக் கூடிய ஒரு பரம இரகசியத்தை தன வசத்தில் வைத்திருந்தாலும், அது கருதிய நன்மையைப் பயக்கும்படி பிரயோகிக்கும் வழி தெரியவில்லையே யென்றுருகி ஏங்கினன்.

இப்படி அவன் மனது கடுஞ்சங்கடத்திலகப்பட்டுத் தவிக்கையில், அவனுக்கு முகுந்தனுடைய ஞாபகம் வந்தது. தன்னைப்போலவே முகுந்தனும்

ஸர்வஜித்திடம் அன்பும் அனுதாபமும் பாராட்டி வந்தவன்; தன்னைப்போலவே அவனும் ஸர்வஜித்தை நிரபராதியென்று நினைத்தவன். தவிரவும் அவன் இரண்டொரு சமயங்களில் பிரபு அநங்கனையும் வரதனையும்பற்றிப் பேசும்போது அவர்களிடத்தில் நல்லபிப்பிராயம் கொண்டதாகக் காட்டவில்லை; ஆகையால் எல்லாவற்றையும் யோசிக்குமிடத்து தனது இரகசியத்தை அவனிடஞ்சொல்லி, முதிர்ந்த புத்தியுள்ளவனான அவனுடைய யோசனையைக் கேட்பதே நலமென்று எண்ணினான்.

முகுந்தனைத் தேடிக்கண்டு பிடிப்பதற்குள்ளாக பத்து நிமிஷங்கள் சென்றன. அவனிடத்தில் தானறிந்த இரகசியத்தை வெளியிட்டான். முதலில் முகுந்தன் திகைத்துப்போய்விட்டான்; ஆயினும் கோபாலன் இவ்விஷயத்தில் பொய்சொல்லக் கூடியவனல்ல வென்றுணர்ந்து "ஜகதீசன் புகழப்படுவாராக, இனி குற்றஞ்செய்யாதவன் கஷ்டப்படக்கூடாது" என்றான்.

கோபாலன்:—ஆம், நாம் ஸர்வஜித்தைக் காப்பாற்றவேண்டும். நீர் அதற்கு வழியைத் தேடினீரா? உமக்குப் புலப்படுகிறதைத் தெரிவிக்கவேணும்.

முகுந்தன்:—எத்தனை மணிநேரத்தில் பிரபு புஷ்யமித்திரர் கோட்டைக்குத் திரும்பிவருவார்?

கோபாலன்:—இருட்டின பிறகுதான் வரக்கூடும்.

முகுந்தன்:—ஜயகாந்தனுடைய மாளிகை இங்கிருந்து ஆறுமைல்கள் இருக்கின்றன; இப்பொழுது கிட்டத்தட்ட மத்தியானமாய்விட்டது. நாம் அவ்விடஞ்சேர குறைந்தது இரண்டுமணிகள் செல்லும். நாம் சேருவதற்குள் அவர் புறப்பட்டு வேறு வழியாகவந்தால் நாம் அவரைக்காணமுடியாது. ஆனால் அவரைப்பார்ப்பதிலும் பயனில்லை. முதலாவது நாம் சொல்லுவதை அவர் நம்புவது கடினம். இரண்டாவது அவர் நம்பி இக்காரியத்தில் பிரவேசித்தால் தீங்காய் முடியுமேயொழிய நன்மை ஒன்றும் ஏற்படாது. ஆகையால் காலதாமதஞ்செய்யாமல் செய்யவேண்டியதை நாமே செய்யவேண்டும்.

கோபாலன்:—தாங்கள் சர்வஜித்தைக் காப்பாற்றுவதற்குத் தகுந்த யுக்தியைத் தேடினால், அந்தப்பிரகாரம் நான் செய்வதற்குத் தடையில்லை. நாம் நமது காரியத்தை முடிப்பதற்கு இடையூறுகளாய் ஏற்படக்கூடிய அபாயங்களைக்கண்டு நான் அஞ்சவில்லை.

முகுந்தன் சற்று நேரம் யோசித்தான், பிறகு திடீரென்று ஒரு தீர்மானத்திற்கு வந்தவன் மாதிரி கோபாலனைப் பார்த்து, எனக்காக கோட்டை வாயிலில் காத்திரு" என்றான். இப்படிச் சொல்லிவிட்டு முகுந்தன் தனது அறைக்கு விரைந்து சென்று, இளங்கவி வாணனுக்குரிய ஒரு உடுப்பை எடுத்துச் சுருட்டி தனது உடுப்பில் மறைத்துக்கொண்டான்; பிறகு ஒரு நீண்ட கயிற்றுச் சுருளையும் தனது வீணையையும் கையிலெடுத்துக்கொண்டு கோட்டைவாயிலில் காத்துக்கொண்டிருந்த கோபாலனோடு சேர்ந்துகொண்டான். பிறகு இருவரும் காட்டில் வேடிக்கையாய் உலாவிவிட்டு வருகிறவர்கள் மாதிரி புறப்பட்டார்கள். காட்டின் மத்தியில் வந்தவுடன் முகுந்தன் மறைத்துவைத்திருந்த உடுப்பை எடுத்து கோபாலனை அணிந்துகொள்ளும்படி சொன்

னான். அப்படியே சிறுவனுஞ்செய்ய, அவன் ஒரு இளங்கவிவாணனாகத் தோன்றினான்.

முகுந்தன்:—“எனது வீணையை கையிலெடுத்துக்கொள். உன்னை யாரென்று யாராவது கேட்டால், நீ எனது பேரனென்றும் என்னிடத்தில் கானங்கற்றுக்கொண்டு வருகிறதாகவுஞ் சொல்லவேண்டும்.

இப்படிச் சொல்லிவிட்டு இருவரும் மலைக்கோட்டைக்கு எது குறுக்குப்பாதையோ அவ் வழியாகச் சென்றார்கள். போய்க்கொண்டிருக்கும் போது மறுபடியும் ஒரு முறை கோபாலன் அநங்கனும் வரதனும் இரகசியமாய்ப் பேசிக்கொண்டதை ஒப்பித்தான்; இப்படி பேசிக்கொண்டே அவர்கள் இரண்டுமணி நேரத்தில் மலைக்கோட்டையை யணுகினார்கள்.

அவர்கள் சரியான வாசற்படி வழியாய் மலைமேல் ஏறுமுன் மலையடிவாரத்தை சற்று உற்று நோக்கி கவனித்தார்கள். கடைசியாக கரடான பாறைகளடர்ந்த ஒரு பக்கத்தில் மற்றவைகளைக்காட்டிலும் ஆழமாகத் தோன்றக்கூடிய ஒரு குழிவு இருந்தது. எந்தப்பாதையை அவர்கள் தேடினார்களோ அதுதான் இது என்று முகுந்தன் நிச்சயங்கொண்டான். அந்த துவாரத்திலிருந்து ஐம்பது அடிகளுக்கு நேர் உயரத்தில் வேறொரு துவாரத்தைக் கண்டார்கள். இதனால் கோட்டைக்குள் போகிறதற்கு இரண்டு பாதைகள் இருந்தது நன்றாய் வெளியாயிற்று. ஆயினும் எந்தத்துவாரத்தின் வழி சென்றால் கைதிகளின் கிடங்குகளில் கொண்டுபோய் விடுமென்பதை அவர்கள் அறியக்கூடவில்லை. அடுத்தாற்போல் இத்துவாரங்களுக்குக் கீழேயுள்ள மலைபடிவாரத்தைக் கவனித்தார்கள். இவ்வடிவாரத்திற்குச் சுற்றிலும் உடைந்த பெரும்பாறைகள் சிதறுண்டுகிடந்தன. இப்பாறையின்மேலொன்றிலிருந்து ஊறிவந்த தெளிவான ஜலத்தைக் கண்டார்கள். முகுந்தனும் கோபாலனும் உற்று நோக்குகையில் கீழேயிருந்து துவாரங்களுக்குச் செல்லக்கூடிய மச்சுப்படிகளைக் காணவில்லை. ஆயினும் கீழே வரவரக் குறுகியதும் மேலே செல்லச் செல்ல சற்று விசாலமான ஒரு நீட்டிக்கொண்டிருந்த பாறையைக் கண்டார்கள்.

முகுந்தன்:—நீ அந்தப்பாறையை உற்றுப்பார். சாய்ந்துகொண்டே அந்தப்பாதை கீழே முடிவு பெருகிறதைப்பார். ஒரு தைரியமுள்ள ஆள் நடந்து போகக்கூடிய விசாலமுள்ளதாயும் சௌகர்யமுள்ளதாயுமிருக்கிறது.

கோபாலன்:—ஆம், எனக்கு அந்தப் பாறைப்பாதை நன்றாய்த் தெரிகிறது. நான் மாத்திரம் கீழேயுள்ள துவாரத்தின் வழியாய் வெளியே வந்தால் அந்தப் பாறையின் வழியாகவே பயமில்லாமல் கீழே யிறங்கி விடுவேன்.

முகுந்தன்:—இறங்கி வருகிற கருத்தைக் கொண்டு தான் அது ஏற்பட்டிருக்கிறது. சந்தேகமில்லாமல் இக்கோட்டையை முற்காலத்தில் கட்டினவர்கள, கோட்டை முற்றுகை போடப்பட்டு உள்ளேயுள்ளவர்கள் சமாளிக்க முடியாவிட்டால் இது வழியாய் தப்பியோடி விடலாமென்ற உத்தேசத்தைக் கொண்டே இவ்வழியை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அல்லது இக்கோட்டை பிடிபடமுடியாதபடி இரகசியமாய் ஆகாரங்கொண்டு போவதற்கென்று ஏற்பட்டிருக்கவுங் கூடும்.

கோபாலன்:—முற்றுகை போடும் சைநியத்திற்கு மாத்திரம் இப்பாதை எப்படி தெரியாமற்போகும்?

முகுந்தன்:—முற்றுகைபோடும் சேனையை உயிர்ச்சேதஞ் செய்யக் கூடிய மலையுச்சியிலிருந்து வர்ஷிக்கப்படும் பாறைகள், பளுவானகற்கள், எரியுந்தணல்கள், உருக்கின ஈயம், பொரிகிற எண்ணெய் இவைகளை தலையில் தாங்கும்படி இங்குவந்து முற்றுகைப் போடுகிறவர்கள் நிற்கமாட்டார்கள். அவர்கள் முக்கியமாய் கோட்டை வாயிலைச் சூழ்ந்துகொண்டிருப்பார்கள். ஆனால் இதைப்பற்றி நமக்கென்ன? நாம் தெரிந்துகொள்ளவேண்டியதை அறிந்தாய் விட்டது. இனி சரியான பாதை வழியாய் கோட்டைக்குள் செல்வோம். நீ எனது பேரன் என்பதை மறந்துவிடாதே.

இப்பொழுது அவர்கள் கோட்டை வாயிலை நோக்கி நடந்து, அவ்வாயிலை யடைந்தார்கள். அங்கிருந்த வாயிற்காவலன் வருகிறவர்கள் கவிவாணர்களென்பதைக் கண்டு யாதொரு தடையுமின்றி அவர்களை யுள்ளே விடுத்தான். ஏனெனில் அக்காலத்தில் முகுந்தன்போன்ற பாட்டுக்காரர்களுக்கு செல்வாக்கு அதிகம். அந்த வாயிலண்டை விரன் இரத்தினம் முதலிய மலையாட்கள் சோம்பேறித்தனமாய் உட்கார்ந்திருந்தார்கள். ஒருவன் மற்றவர்களைப் பார்த்து "நமது எஜமானர்கள் இதுவரையில் பொழுதுபோக்கமுடியாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்ததற்கு நல்லவேளையாய் அவர்களை உற்சாகப்படுத்துவதற்காகவே இவர்கள் வந்துவிட்டார்கள்" என்றான்.

வீரனும், "ஆம், உண்மைதான்; குண்டகீலரும் விரரஸமுள்ள பாட்டைக் கேட்க ஆசை கொண்டவர். ஆகையால் இப்பெரியவரையும் இச்சிறுவனையும் அவர்கள் சமுகத்தில் நானே கொண்டுபோய்ச் சேர்க்கிறேன்," என்று சொல்லி, அவ்விருவர்களையும் கூட்டிக்கொண்டு எஜமானர்களிருந்த அறையில் கொண்டுபோய்விட்டான்.

38-வது அத்தியாயம்.

முகுந்தனும் கோபாலனும் சகோதரர்களின் சமுகத்தையடைந்தபோது சாயந்தரம் மணி மூன்றிருக்கலாம். அச்சமயத்தில் அவ்விருவர்களும் சிமாட்டி லீலாவதியை அவர்கள் செய்திருந்த ஏற்பாட்டைக் குறித்து தனித்துப் பேசிக்கொண்டிருந்தார்கள். அநங்கனிடமிருந்து பத்திரம் வரும் நேரத்தை ஆவலோடு எதிர்பார்த்து நின்றார்கள். ஏனெனில் அவர்கள் மனதில் அநங்கன தங்களை எதிர்த்து உலக அபவாதத்தை யடைவதைக்காட்டிலும் தங்களுடைய நிபந்தனைகளுக்குக்கட்டுப்பட்டே வருவான் என்றே நிச்சயித்துக்கொண்டார்கள். ஆயினும் தாங்கள் நினைத்தகாரியத்தை முடிப்பதில் தாமதத்தைப் பொறுக்காதவர்களாதலால் அவர்களுக்கு சில மணிகளடங்கிய நேரத்தைப் போக்குவது மகா கடினமாயிருந்தது.

இப்படி அமைதியில்லாத நிலையிலிருக்கையில் முகுந்தனும் கோபாலனும் பிரவேசிக்கவே இருசகோதரரும் ஆநந்தங்கொண்டார்கள். சாதாரணமாய் சுபாவமில்லாத விநயத்துடன் குண்டகீலன் வந்தவர்களை உபசரித்து உட்காரச்சொன்னான்; கார்த்தவிரன் விரனைப் பார்த்து "வந்திருக்கிற கவிவாணர்களுக்கு சிரமப்பரிகாரமாகும்படி கொஞ்சம் போஜனமும் திராக்ஷாரஸமும் கொண்டுவரச்சொல்லு" என்றான். இவ்வாக்ஞைகள் உடனே நிறைவேற்றப்பட்டன; முகுந்தனும் கோபாலனும் போஜனஞ் செய்கையில், தலைவர்கள் அவர்களோடு சரசமாய்ப்பேசினார்கள். கேட்ட கேள்விகளுக்கெல்லாம் முகுந்தன் தக்கபடி பதிலளித்தான்.

போஜனம் முடிந்தது; முகுந்தன் வீணையைக் கையிலெடுத்து சுருதி கூட்டினான்; தனது பழக்கமுள்ள விரல்களைப் பிரயோகித்து வீரரஸமயமான கானஞ்செய்யவே, சகோதரர்கள் ஆநந்தப்பரவசராயினர். அத்தேசத்தில் கிறிஸ்து பிறந்த பதின்மூன்றாம் நூற்றாண்டில் அதிசூரவிக்ரமன் என்ற ஒரு மகாவீரன் இருந்தான். இவன் தனது தாய் தேசமானது அந்நியர்களால் படையெடுக்கப்பட்டபோது, மனந்தளர்ந்து நின்ற தனது தேசத்தவர்களின் மனதில் கட்டிலகப்படாத உற்சாகத்தை யெழுப்பி, அவர்களுக்குத் தலைமையதிகாரத்தை வகித்து, அகாதமான சௌர்ய பராக்கிரமங்களைச் செய்து, படையெடுத்தவர்களை முதுகு காட்டியோடும்படி முறியடித்து, தனது தாய் நாட்டின் சுவாதீனத்தை நிலைநாட்டினது மல்லாமல், தனக்கும் தனது நாட்டிற்கும் அழியாக்கீர்த்தியையும் சம்பாதித்தான்.

இவ்வழியாக் கீர்த்திபெற்ற அதிசூர விக்கிரமனுடைய பராக்கிரமங்களைப்புகழ்ந்து முகுந்தன் பாடவே, சகோதரர்களின் முகங்களில் மாறுதல்கள் உண்டாய்விட்டன; கண்கள எரிகிற தீபங்களைப்போல் ஜொலித்தன; வெளுத்த கன்னங்கள் சிவந்தன; அவர்களது அகன்ற மார்புகள் ப்ரவசத்தால் துடித்து மூச்சுவிட்டன; சுருக்கமாக, முகுந்தனது வீணாகானமானது அவர்களை ஆட்டிவைத்து விட்டது.

பாட்டு முடிந்தவுடன் சகோதரர்கள் இருவரும் எழுந்து மகா சந்தோஷத்தைக் காட்டிக்கொண்டு முகுந்தன் கையைக் குலுக்கினார்கள். "சிறந்த பாடகரே, நீங்கள் இனிய குரலில் பற்பல இராகங்களுடன் இப்பொழுது பாடிய பாட்டு வைத்தியனுடைய மருந்து செய்துவந்த நன்மையைக்காட்டிலும் அதிக நன்மையைச் செய்துவிட்டது" என்றான் குண்டகீலன். கார்த்தவீரனும் முகுந்தனைப்பார்த்து, "எங்களுடைய முழுவந்தனமும் உமக்கே; உமது பேரனும் நீங்களும் கொஞ்சகாலம் இக்கோட்டையிலேயே தங்கிவிட்டுச் செல்ல இஷ்டங்கொண்டால் நாங்கள் உங்களை மிகக் களிப்புடன் உபசரிக்க சித்தமாயிருக்கிறோம்" என்றான்.

"நாம் என் குறைந்தது இருபத்தொரு நாட்களாவது இருக்கச்சொல்லக்கூடாது?" என்று கார்த்த வீரனைப்பார்த்துக் குறிப்பாய்ச் சொல்லிவிட்டு மறுபடியும் முகுந்தனை நோக்கி "நீர் வீரர்களின் சரித்திரங்களைப் பாடுவது போல அவ்வளவு நன்றாய் கலியாணப்பாட்டுகளையும் பாடுவீரா?" என்றான்.

கனம்பொருந்திய வீரர்களே, நீங்களே நிர்ணயித்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிக்கொண்டே முகுந்தன் மறுபடியும் வீணையை மீட்டி மனதை உருகச்செய்யக்கூடியதும் சிருங்காரரசம்பொருந்தியதுமான சில கலியாணப் பாட்டுகளைப்பாடினான். மறுபடியும் சகோதரர்கள்களிப்படைந்தார்கள்; இன்னொரு முறை குண்டகீலன் முகுந்தனைக் கோட்டையில் தங்கும்படி கேட்டான்.

முகுந்தன்:—"உண்மையில் சமீபத்தில் இங்கு ஒரு விவாஹம் நடப்பதாயிருந்தால், நாங்களிங்கிருப்பதற்கு யாதொரு தடையுஞ் சொல்லவில்லை"

குண்டகிலன்:—"ஆமாம், தடையில்லை; இன்றிருபத்தொன்றாம் நாள் இங்கு ஒரு விவாகம் நடைபெறும்."

முகுந்தன்:—"நான் இருக்கவேண்டுமென்று நீங்கள் விரும்பினால் ஒரு விஷயத்தில் நீங்கள் எனக்கு முழு சுயாதீனம் கொடுக்கவேண்டும்; உங்களுடைய சமயக்கொள்கைகளை நான் அறியேன். ஆனால் நானோ பழைய மதசம்பிரதாயத்தைச் சேர்ந்தவன். ஆகையால்—"

குண்டகீலன்:—"நாங்களும் அதைச் சேர்ந்தவர்கள்தான்; ஆகையால் நீர் யாதொரு சங்கோசமின்றி எங்களுடைய சிறு கோவிலுக்குள் நினைத்தபோது போகலாம். மற்றெவ்விஷயத்திலும் நீங்கள் உங்களிஷ்டப்படி காலத்தைக் கழிக்கலாம். நீங்கள் போஜனப் பிரியர்களாயிருந்தால், உங்களுக்கு எப்பொழுது என்னென்ன வேண்டுமோ அதையெல்லாம் தாராளமாய் புசியுங்கள்; திராக்ஷ ரஸத்தில் அபேக்ஷையிருந்தால் காலமே முதல் படுக்கிற வரையில் அதிலேயே நீந்திக்கொண்டு வேண்டுமென்றாலும் இருக்கலாம். நீங்கள் படுப்பதற்கு அடுத்தடுத்த இரண்டு அறைகள் ஏற்படுத்தப்படும்; உங்களது சௌகர்யங்களை கவனிப்பதற்கு ஒரு வேலையாள் பக்கத்திலேயே காத்திருப்பான். கடைசியாக நீங்கள் எங்களைவிட்டு நீங்கும்போது உங்களுக்கு பவுன் பவுனாக ஏராளமான வெகுமதியளிக்கப்படும்."

முகுந்தன்:—இவ்வளவு நன்மைகளை நீங்கள் எனக்குச் செய்ய விருப்பத்துடனிருக்கும்போது நான் மறுத்துச் சொல்லுவது அற்பத்தனமாகும். நீங்கள் எங்களுக்கு ஏற்படுத்த உத்தேசித்திருக்கிற அறைகளிற் செல்ல உத்திரவுகொடுத்தால், நாங்கள் சற்று சிரமப்பரிகாரஞ் செய்துகொண்டு, இரவில் பாடுவதற்கு ஆயத்தமாயிருப்போம்.

கார்த்த:—வாருங்கள்; நான் உங்களுக்கு முதலில் கோயிலைக்காட்டிவிட்டுப் பிறகு உங்களறைகளுக்கு இட்டுக்கொண்டு போகிறேன்.

இப்போது மணி நாலுக்கு மேலாயிற்று; இது ஜனவரிமாத மாதலால் அப்போதே இருட்ட ஆரம்பித்து விட்டது. ஆகையால் கார்த்தவீரன் கையில் ஒரு விளக்கையெடுத்துக்கொண்டு அவ்விருவர்களையும் கோயிலுக்குக் கூட்டிக்கொண்டு போனான்; கதவுகளைத்திறந்து காட்டிவிட்டு மேலே சென்று ஒன்றையொன்று ஒட்டியுள்ள இரு அறைகளுக்கருகில் வந்து நின்று "இவைகள் உங்களுடையதே" என்றான். பிறகு எரிகிற விளக்கை ஒரு அறையிலுள்ள மேஜையின்மேல் வைத்து அவ்விடம் விட்டகன்று விட்டான். கார்த்தவீரன் போனதும் முகுந்தனும் கோபாலனும் தங்களுடைய காரியம் நிறைவேறுவது நிச்சயமென் றுணர்ந்தவர்கள் மாதிரி சந்தோஷக்குறிகளோடு பேசலானார்கள்.

கோபாலன்:—சிறு கோயிலைப் பார்ப்பதற்கு வேண்டிய அநுமதியை எவ்வளவு தந்திரமாய் வாங்கிவிட்டீர்கள்! இதுவரையில் நமது கோரிக்கைகள் திருப்திகரமாய் முடிந்ததுபோலவே பாக்கியும் முடியும்படி பகவான் அநுக்கிரகிக்கட்டும். ஆனால் நமக்குக்கிடைத்திருக்கிற அறைகள வெறுப்பையுண்டு பண்ணுகிறது. இத்தலைவர்கள் இருந்த இடங்கூட அனந்தகிரிக்கோட்டையில் வேலைக்காரர்கள் இருக்கிற இடத்தைக் காட்டிலுஞ் சிறந்ததாயில்லை. இந்தப்படுக்கையோ, இலக்ஷணமோ [பாயை எடுக்கிறான்.]

முகுந்தன்:—இதென்ன! பிடியினருகில் ஒடிந்துபோன கத்தியின் அலகு மாதிரியிருக்கிறதே! சரி! எல்லாம் விளங்கி விட்டது! ஸர்வஜித்தின் விசாரணையில் பிடிமாத்திரம் கோர்ட்டார் முன் கொண்டுவரப்பட்டது.

இதற்குள்ளாக கோபாலன் அந்த அலகைக்கையிலெடுத்து அதை விளக்கண்டையில் கொண்டுபோய் பரிசோதித்தான். அதைப் பார்த்துக்கொண்டே சொல்லுகிறான். "சரி நான்நினைத்த பிரகாரமே யிருக்கிறது. இக்கத்தி அமராபுரியில் இரத்தினவேலுவிடம் வாங்கப்பட்டது. இது எஜமான் ஸர்வஜித்தின் கத்திதான்"

முகுந்தன்:—அப்படியானால் பகவான் நம்மிடத்தில் அநுகூலமாகவே இருக்கிறார். அவரே இதை நமது வழியில் வைத்திருக்கிறார். இது சந்தேகமற்ற ஜயக்குறியே.

இப்பொழுது முகுந்தனும் கோபாலனும் இருந்த அறையிற்றான் முந்திகாட்டு ஸ்திரீ இருந்தாளென்பதையும், அவள் அந்த அறையில் கத்தியலகை ஒளித்து வைத்தாளென்பதையும் நாம் சொல்லவேண்டியதில்லை. முகுந்தன் அதைத் தொங்கிக்கொண்டிருந்த நெடுஞ்சட்டைக்குள் பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டான்; இதற்குமேல் அவ்விருவர்களும் அறைமணிநேரம் தாங்கள வந்த காரியத்தைக் குறித்துப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

இவர்களை ஒருவன்வந்து சாப்பிடக் கூப்பிட்டபோது மணி ஆறு இருக்கலாம். போஜன மண்டபத்தில் ஏராளமான உணவு பரிமாரப்பட்டிருந்தது. மானிறைச்சி, மீன்வகைகள், மாட்டிறைச்சி, கொழுப்பு நிறைந்த ஆட்டிறைச்சி, வாத்து இன்னும் பலவிதமான பக்ஷிகள் பக்குவப்படுத்தி வைக்கப்பட்டிருந்தன. பானம் பண்ணுவதற்கு ஐந்தாறு வகை திராக்ஷரசங்கள் இருந்தன. போஜனத்துக்கு உட்கார்ந்தவர்கள் சுமார் முப்பதுபேர் இருக்கலாம். குண்டகிலனும் கார்த்தவீரனும் தலைமை ஸ்தானத்தில் இரண்டு நாற்காலிகளில் உட்கார்ந்தார்கள்; அவர்களது இருபக்கங்களிலும் அவரவரது அந்தஸ்துக்குத் தக்கபடி மற்றவர்கள் உட்கார்ந்தார்கள். முகுந்தனும் கோபாலனும் தலைவர்களுக்குச் சமீபத்தில் உட்காரவைக்கப்பட்டார்கள். போஜனம் நடக்கும்போது சகோதரர்கள் இவர்களையதிகமரியாதையாகஉபசரித்தார்கள்.

இப்படி யிருக்கும்போது நாலாட்கள் சேர்ந்து பக்குவப்படுத்தி யிருந்த ஒரு பெரிய காட்டுப்பன்றியி னிறைச்சியை மேஜையில் கொண்டுவந்துவைத்தார்கள். இப்புது உணவைக்கண்டவுடன் முகுந்தனும் கோபாலனும்ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள். தங்களுடைய காரியம் கைகூடுமென்றே கடவுள் அடையாளத்திற்குமேல் அடையாளத்தை காட்டுகிறாரென்று அவர்கள் சொல்லிக்கொள்ளுவதுபோல் இருந்தது.

"அந்தப்பன்றி இதுதானோ?" என்று குண்டகிலன் சமையற்காரனைக் கேட்டான்.

"ஆம், எஜமானே, கிட்டத்தட்ட மூன்று வாரங்களுக்குமுன் ஒடிந்த கத்தியோடு——" என்று சமயற்காரன் சொல்லி முடிப்பதற்குள் குண்ட

கீலன் "சரி! சரி! தெரிந்துகொண்டேன்" என்று சமையற்காரனைப் பார்த்துச் சொல்லிவிட்டு, மற்றவர்களைப்பார்த்து "நம்முடைய கிண்ணங்களை திராக்ஷ ரஸத்தால் நிரப்பிக்கொள்ளுவோம்; காட்டுப்பன்றியை ஒவ்வொருவரும் கொஞ்சம் புசித்துவிட்டு, இன்று புதிதாய் வந்திருக்கிற பாடகர்களுக்கு வாழ்த்தாக திராக்ஷாரஸத்தைக் குடிப்போம்" என்றான்.

அப்படியே அவர்களுஞ்செய்யவே, முகுந்தன் வீணையைக்கையிலேந்தி கானஞ் செய்யத் தொடங்கினன். இப்பொழுது அவன் எடுத்துக்கொண்ட விஷயம் அத்தேசத்தில் புராதனத்தில் நடந்த உக்கிரமான சண்டைகளிலொன்றாகிய பானக்பர்ண் யுத்தம். இவ்யுத்தத்தை வர்ணிக்கிற பாடலைப் பாடவே சகோதரர்கள் மாத்திரமல்ல, அங்கிருந்த எல்லோரும் உற்சாகமென்னும் கடலிலாழ்ந்து தத்தளித்தார்கள். முகுந்தன் பாட்டானது ஆயுதங்களின் உரசுதல்களையும் படபடபட படவென்று ஓடி மோதிக்கொள்ளும் குதிரைப்பட்டாளங்களின் ஓசைகளையும், ஹாய் ஹாய் என்ற வீரர்களுடைய கர்ஜனைகளையும், இன்னும் மற்ற யுத்த அமளிகளையும் கோஷங்களையும் உள்ளது உள்ளபடியே, எடுத்து வர்ணிக்கவே, சகோதரர்களும் அங்குள்ள வீரர்களும் மெய்மறந்து ஒரு சண்டை நடக்கிறதாகவும் அச்சண்டையில் தாங்கள் யுத்தஞ்செய்கிறதாகவும் எண்ணி தங்களுடைய உறைகளிலிருந்து வாட்களை பாதி உருவி விட்டார்கள்!

முகுந்தனுடைய கானம் அவ்வளவு மகிமை பொருந்தியதாக விருந்தது; அவன் அங்கு ஒரு மாந்த்ரீகனுகவும் மற்றவர்கள் மந்திரத்தால் கட்டுண்டவர்கள்போலும் தோன்றினர்கள்.

சகோதரர்கள் இருவரும் இன்னுஞ் சிறிதுநேரம் முகுந்தனது கானத்தைக் கேட்டு ஆநந்தத்தி லாழ்ந்திருப்பார்கள்; ஆனல் எட்டுமணியானவுடன் அவர்களது விசுவாச ஊழியனுன இரத்தினம் திடீரென்று உள்ளே புகுந்தான்; சகோதரர்கள் இருவரும் எதையோ வினவுகிறவர்கள் மாதிரி அவனைக்குறிப்பாய்ப் பார்க்கவே, அவன் தன் சட்டைப்பையிலிருந்து முத்திரையிட்டிருந்த ஒரு கடுதாசி பத்திரத்தை மேஜையில் வைத்தான்.

"சரி சந்தோஷம்" என்று குண்டகீலன் சொல்லிக்கொண்டே இரத்தினத்தினுடைய பார்வைகளை முகுந்தன் கோபாலன் இருக்குமிடத்தை நோக்கித்திருப்பினன்; அவன் அப்படிச்செய்தது "இங்கு அந்நியர்கள் இருக்கிறார்கள் எச்சரிக்கையாயிரு" என்று சொல்லுவதுபோல் இருந்தது.

முகுந்தனும் கோபாலனும் ஒருவரை யொருவர் குறிப்பாய் பார்த்துக்கொண்டார்கள்; அவர்கள் பார்த்துக்கொண்டது 'இதோ பிரபு அநங்கனுடைய ஒப்பந்தப்பத்திரம் வந்துவிட்டது' என்று சொல்லிக்கொள்வது போலிருந்தது.

குண்டகீலனும் கார்த்தவீரனும் அங்கு விட்டெழுந்து பத்திரத்தை வாசிக்க தங்கள் தனிவீடுதிக்குச் சென்றார்கள்; முகுந்தனும் கோபாலனும் தங்களறைகளுக்குச் சென்று, தனியாயிருக்குஞ் சமையம் வாய்த்ததும்

"இந்த இரகசிய துராலோசனை வரவர முத்திக்கொண்டுவருகிறது" என்று ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டார்கள்.

முகுந்தன்:—ஐயோ, அந்தப்பத்திரம் நமது கையிலகப்படாதா?

கோபாலன்:—நமக்கு அது மாத்திரம் கிடைத்துவிட்டால், பிரபு அநங்கனை நசுக்கிவிடலாமே? அந்தப்பத்திரத்தை யடைவதற்கு ஏதாவது வழியிருக்கிறதா?

முகுந்தன்:—ஆம், ஒரே ஒருவழி தான் எனக்குத்தோன்றுகிறது. கடவுளநுக்கிரகத்தால் அது பலித்துவிட்டால் நமது விருப்பம் சம்பூர்ணமாய் விடும். என் பின்னுடன் வா.

இப்படி சொல்லிக்கொண்டே கோபலனைக் கூட்டிக்கொண்டு அக்கோட்டைக்கூடங்களின் வழியாய் தன் வீணையை மீட்டி இனிமையாய்ப் பாடிக் கொண்டே சென்றான். இச்சமயத்தில் சகோதரர்களிருவரும் வெளியேவந்து முகுந்தனையும் கோபாலனையும் தங்கள் தனிவிடுதிக்கு வரும்படிகேட்டார்கள்.

"ஆஹா, இதோ வந்துவிட்டோம். நானும் என்பேரனும் கீழே இறங்கி தங்களது ஊழியக்காரர்களின் வினோதத்திற்காக பாடிவரலாமென்று—" என்று முகுந்தன் சொல்லுவதற்குள் கார்த்தவீரன் "அவர்களுக்கு நாளைப் பாடிக்காட்டலாம்; இப்போது ஒரு சந்தோஷமான செய்தி எங்களுக்கு வந்திருக்கிறது. நாங்கள் இப்போது குடித்துக்கொண்டே உங்களுடைய கானத்தைக்கேட்க ஆவலாயிருக்கிறோம்" என்றான்.

முகுந்தன் செய்த தந்திரமும் இக்கருத்தைக்கொண்டே யாதலால், அது பலித்துவிட்டதென்று சந்தோஷமுற்று கோபாலனுடன் அறையில் பிரவேசித்தான்.

☞ ஈ. கே. சிவசுப்பிரமணிய ஐயர், பி. ஏ.

கமலாலயம்.

—(o)—

ஆல்பிரட் அரசன்.

[10-வது பக்கத்தொடர்ச்சி.]

விழிக்கிறான் பாவம் ஆல்பிரட்: பாலை இறக்கி வைத்துவிட்டு அடுப்பைப் போய்ப் பார்த்தாள் காண்டலீன்; அவளுக்குக் கோபம் மூண்டுவிட்டது. எந்த ஸ்திரீ தான் சகிப்பாள்!! உடனே அவள் ஆல்பிரட்டை நோக்கி "அடே பித்தனே, சோம்பேறி, இப்படியும் கவனமற்று இருப்பானா ஒரு மனிதன்!!" என்பதற்கு முன் ஆல்பிரட் "என் தாயே, நானென்ன செய்

வேன், அதைப்பார்த்து என் மனம் தவிக்கின்றது. என்னை மன்னிக்கவேண்டும், அடுப்பின் தீ தோசையை எவ்வாறு தீய்த்துவிட்டதோ அதைவிட பதின்மடங்கு அதிகமாய் தாங்கமுடியா விசனமானது என் மனதை சுடுகின்றது. அவ்விசனத்தால் நான் எல்லாநினைவையும் இழந்துவிட்டேன்—'.

குடியானவன்:—"மனைவி நீ நம் நண்பரை மன்னிக்கவேண்டும், அதிக விசனத்தால் மறந்துவிட்டார் போலிருக்கிறது; அவர் தம்முடைய வீடு, பெண்டு, பிள்ளைகளைப்பற்றி விசனப்படுவது நியாயம்தானே''என்று வேண்ட காண்டலீன் ஒருவாறு சாந்த மடைந்து இருவருக்கும் உணவளித்தாள். வாசனை மிகுந்த சுத்தமான பாலையும் உருசிகரமான ரொட்டியையும் ஆல்பிரட் திருப்தியாய் உண்டான். பிறகு விருந்தாளியை எவ்விடம் படுக்கவைக்கலாமென்று புருஷனும் பெண்சாதியும் யோசித்துக்கொண்டிருந்தார்கள்.

திடீரென்று "டபடப" வென்று ஒரு பெரும் சத்தம்கேட்டது. குதிரைகள் வருகிற சத்தம் என்று எல்லாருக்கும் விளங்கிற்று. இருட்டில், இவ்வேளையில் வருகிறவர்கள் யார் என்று அறிந்துவர ஓடினான் வெளியே குடியானவன். ஆல்பிரட் டேன்ஸ் வருகிறார்களோ என்று எண்ணித்தன் மனத்துள் "அரச மரத்தைப் பிடித்தபேய் பிள்ளையாரையும் விடாதுபோல் இருக்கிறதே! வந்த இடத்திலும் இந்தத்தொந்தரவா? நான் இங்கே வந்ததினாலேயே, இவர்களுக்கும் கஷ்டத்தை கொண்டுவந்து விடுவேன் போலிருக்கிறது. நான் காட்டிலேயே திரிந்துகொண்டிருந்தால் பசியால் இறந்துபோனாலும், அதுவே இந்த கஷ்டங்களைப் பார்ப்பதைவிட மேலானது!!" என்று பலவாறு தன்னையே நொந்துகொண்டான்.

ஒரு நொடியில் குடியானவனும் திரும்பிவர அவனுடன் ஒரு வீரன் உருவின கத்தியுடன் உட்புகுந்தான். கத்தியைக்கண்டதும் காண்டலீன் அலறிக்கொண்டு "ஐயோ, டென்ஸ் வந்துவிட்டனரே, வந்து விட்டனரே!!" என்று ஓட ஆரம்பித்தாள். அவ்வீரன் அவளையாவது அவள் புருஷனையாவது சற்றும் கவனிக்கவில்லை. நேராய் 'சரசரவென்று' ஆல்பிரட் பக்கத்துக்குப் போய் அவன் முன்னே மண்டிபோட்டு வணங்கிவிட்டு "இறைவா! என் அரசே!! எமது கண்ணுக்குக் கண்ணே! உம்மை எவ்விடமெல்லாம் தேடினோம்! கடைசியாய்க் கண்டோமே! என்றான்.

ஆல்பிரட்:—"என்நேசனே! எல்லா! (Ella)—" மேல் பேச நா எழவில்லை.

எல்லா:—இறைவா! நான் மிகவும் இனிமையான சமாசாரம் கொண்டு வந்திருக்கிறேன். கோட்டையில் அடைபட்டிருந்த ஆங்கிலேய சேனை ஒரே அடியாய் வெளிப்பாய்ந்து டேன்ஸை கொன்று துண்டு துண்டாக்கி ஜயம் கொண்டனர். இரண்டு மூன்று சேனை ஒருங்கு சேர்ந்துவிட்டன. டேன்ஸ் தலைவர்களில் பலபேர் இறந்துபோய்விட்டனர். ஜனங்களெல்லாம் 'அரசன் எங்கே! எங்கள் ராஜ சிங்கம் எங்கே!! இங்கிலாந்தின் வீராதி வீரன் எங்கே!! எங்கே!!!' என்று கதறுகின்றனர்.

ஆல்பிரட்:—"எல்லா! நீ சொல்வது உண்மையா? நான் இன்னுமும் இங்கிலாந்துக்கு அரசனே? இன்னுமும் ஆங்கிலேயர் என்னை இறைவன் என்று அழைக்கின்றார்களோ!!" என்றான்.

எல்லா:—"அதற்குச் சந்தேகமென்ன; டேன்ஸின் காக்கைக் கொடி பிடிபட்டது; அவர்கள் சேனை நடுங்குகின்றது, ஆங்கிலேயர் தம் அரசனுக்கு ஏங்குகின்றனர்!! இக்கடிதத்தைப்படித்தால் எல்லாம்தெரியவரும்." என்று ஒரு கடிதத்தை நீட்ட, அரசன் படிக்கிறான்.

இச்சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டிருந்த குடியானவனுக்கும் அவன் மனைவிக்கும் இப்பொழுதுதான் தங்கள் வீட்டுக்கும்வந்தவன் இன்னான்என்று விளங்கிற்று. உடனே காண்டலீனுக்கு' உதைப்பு, எடுத்துக்கொண்டது. தன் புருஷனை நோக்கி "என் அன்பே! நம் இருவரையும் கொன்றுவிடுவார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை!" என்று தாழ்ந்த குரலில் சொன்னாள். அதற்குக் குடியானவன "மனைவி! எப்பொழுதும் உனக்கு நாக்கு நீளம்தான்! வைவது என்றால் கொஞ்சமேனும் முன்பின் பாராது வைது விடுகிறாய்! வேண்டாம் வேண்டாம் என்று சொன்னாலும கேட்பதில்லை—" என்பதற்குள் காண்டலீன் "ஆமாம்! நம்மரசன் என்று யார் கண்டார்கள்! தெரிந்தால் வைதிருப்பேனா" என்றாள்.

அரசன் கடிதத்தைப் படித்து முடிந்ததும், அப்பொழுதே புறப்பட்டுப் போகத் தலைப்பட்டான். அச்சமயத்தில் குடியானவனும், அவன் பெண்சாதியும் அரசன் காலில் விழுந்து "அரசே மன்னிக்கவேண்டும்! மன்னிக்க வேணடும்!! எம் அருமை அரச என்று நாங்கள் அறியவில்லை, தண்டனை செய்தாலும் சொற்ப தண்டனையுடன் எங்களை விட்டுவிட வேண்டும்" என்று பலவாறு கெஞ்சிக்கேட்டுக் கொண்டனர்.

ஆல்பிரட் "உங்களையா தண்டிப்பது? அழகாய் இருக்கின்றது! நான் உங்களுக்கு வந்தனம் அளிக்கவேண்டும்; அதையும் மறந்தேனே! எனக்குப் பசிக்கு உணவளித்த உங்களுக்கா தண்டனை! கடவுள் அருளால் நான் இனி நடக்கும் சண்டையில் ஜயித்து மறுபடி சிம்மாசனம் ஏறுவேனாகில் முதலில் உங்களுக்குத் தக்கபடி இனம் கொடுத்துவிட்டு மறுவேலை பார்ப்பேன்!! தாயே! நீங்கள் சொன்ன வார்த்தைகளால் எனக்கு சற்று வருத்தமே கிடையாது. உங்களைப்போல் கபடமற்ற ஜனங்கள் இங்கிலாந்தில் இருக்கும் வரையில் இத்தேசத்துக்கு ஒரு குறைவும் வராது, உங்களுக்கு மறுபடியும் வந்தனம் என்று சொல்லிவிட்டுத் தன் சேனைத்தலைவனுடன் புறப்பட்டுவிட்டான் ஆல்பிரட் மஹாராஜன்.

டேன்ஸுடன் சண்டைசெய்து ஆல்பிரட் ஜயமடைந்தான் என்பதற்குச்சந்தேகமென்ன! அவர்களோடு சமாதானம் செய்துகொண்டான். தேசத்தில்வசிக்கும் ஒவ்வொருவருக்கும் நியாயம் சரிவர நடத்திவந்தான். ஆல்பிரட் காலத்தில் தர்மம் நான்கு பாதத்தாலும் நடைபெற்றது. ஒருகுழந்தையானாலும்சரி, ஒரு ஸ்திரீயானாலும் சரி, பாதாதிகேசம் வரையில்நகைபோட்டுக் கொண்டு இருட்டில் தனிவழியே போனாலும் திருடன் வரமாட்டானாம்.

டேன்ஸ-டன் சண்டைசெய்த அநுபோகத்தால் தன்தேசத்துக்குநிலையான சேனை ஒன்று வேண்டுமென்று கண்டு ஒரு பலமான சேனையையும், கடலில் எதிரிகளைத்தொடர்ந்து போய் அவர்களைத்தொலைக்க, ஒரு கடற்படையையும் ஏற்படுத்தினன். ஜனங்கள் படிப்பு மிகுந்து விருத்தியடையக் கலாசாலைகள் வைத்து ஐரோப்பாவிலிருந்தும் மற்ற இடங்களில் இருந்தும் சிறந்த வித்வான்களை வரவழைத்து அவர்களின் உதவியால் ஜனங்களுக்கு போதித்து வந்தான். அவன் காலத்தில் பலவிதக் கைத்தொழில்களும் விருத்தியடைந்தன. ஆகையால் இன்றைக்கும் ஆங்கிலேய நாட்டில் ஆல்பிரெட் என்ற பேரை வெகு பத்தியுடனும் அன்புடனும் ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருக்கின்றனர். தன்னுயிரைப்போல் மன்னுயிரைக் காத்த இராஜராஜன் 901 வருஷம்வரை இங்கிலாந்தில் அரசு புரிந்தான்."

கதைமுடிய ஒருமணி நேரம் ஆய்விட்டது. தோசையைத் தீயவிட்டு ஆல்பிரெட் விசனித்துக் கொண்டிருக்கும்போதும், காண்டலீன் இடத்தில் அகப்பட்டுக்கொண்டு விழிக்கும்போதும் மனமுருகிக் கண்ணீர்விடாதவர்களே கிடையாது.

ருக்மணியம்மாள்:—கடைசியில் ஆல்பிரெட் அரசனுக்கு எல்லாம் ஜயமாய் முடிந்ததே அதுவே சந்தோஷம்!

அகிலாண்டநாயகி:—அப்படிப்பட்ட அரசனை உடைத்தாய் இருக்க அந்த ஜனங்கள் என்ன பாக்கியம் பண்ணினவர்களோ தெரியவில்லை.

ஞானம்பிகை:—அது மட்டுமல்ல பாட்டி! அதே வம்சத்தில்சேர்ந்தவர் தான் நமது அரசர் எட்வர்ட் சக்கிரவர்த்தியும் என்கிறார்கள். அவர் நமது தேசத்தார் மீது எவ்வளவு அன்பும் கருணையும் வைத்து இருந்தார் பாருங்கள். அவருடைய குமாரர் 5-வது ஜார்ஜு நமக்கு இப்பொழுது சக்ரவர்த்தி. அவரும் அவ்விதமிருக்கிறார்.

ருக்மணியம்மாள்:—ஆல்பிரெட் அரசனுடைய அமைதியும் சாந்தமும் ஒருவருக்கும் வராது. காண்டலீன் கண்டபடி ஏசும்போதும் என்ன பொறுமை! தர்மபுத்திரர் என்றே சொல்லவேண்டும்!

லக்ஷ்மியம்மாள்:—அந்த காண்டலீனைக் கண்டால் எனக்குப்பிடிக்கவில்லை. என்னவாய்; என்ன வார்த்தை; பெண்கள் அப்படிப் பேசப்படாது.

சாவித்திரியம்மாள்:—லக்ஷ்மி நீயப்படி பேசுவது நியாயமில்லை. காண்டலின் கெட்டவள் அல்ல; கபடமற்றவள்; மனதில் ஒன்றும் வெளியில் ஒன்றுமாய்ப் பேசத்தெரியாத பட்டிக்காட்டுப்பெண்; அம்மட்டே ஒழிய அவளைக் கெட்டவள் என்று சொல்லக்கூடாது.

நாழிகை ஆய்விட்டது மறுபடி அடுத்த வெள்ளிக்கிழமை கூடுவோம். நம்ம ருக்மணியம்மாள் ஏதாவது படிக்கட்டும் மஹாராஜன் ஆல்பிரெட் வம்சத்தாரும், சீர்பெற்ற எட்வர்ட் சக்கிரவர்த்தியின் வம்சத்தாரும், நம்மைப் பலகாலம் ஆளக்கடவது:—மங்களம் பாடுகிறாள்.

(முற்றிற்று.)

வாயில்காப்போன்.

சாஸ்திரப் பாடம்:—மிதக்கும் வஸ்துக்கள்.

ஹைட்ராமீடர்களும்—கப்பல்களும்.

பத்து ரூபாய்களை ஜலத்தில் போட்டால் அவை மூழ்கிப்போய்விடும். அதற்குப் பதிலாய் பத்து ரூபாய் எடையுள்ள ஒரு வெள்ளிக்கிண்ணத்தை ஜலத்தில் வைத்துப்பாருங்கள். என்ன நிகழ்கின்றது? மிதக்கின்றதல்லவா? அதுவே மாதிரிதான் கப்பல்களும்; இரும்புத்துண்டு ஜலத்தில் மூழ்கிப் போகின்றது; இரும்புத்தகட்டால் செய்த கப்பலோ எவ்வளவோ கனமான வஸ்துக்களையும் எத்தனையோ மனிதர்களையும் தூக்கிக்கொண்டு கடலின்மேல் செல்லுகின்றது. இதற்குக்காரணம் சற்று கவனித்தால் நன்கு விளங்கும். பத்து ரூபாய்களுக்கு எவ்வளவு இடம் வேண்டுமென்பதையும் அதே எடையுள்ள கிண்ணத்திற்கு எவ்வளவு இடம் வேண்டுமென்பதையும், சற்று கவனித்துப்பாருங்கள். கிண்ணம் முழுவதும் வெள்ளியா? அல்லது முழுவதும் வெள்ளியாயிருந்தால் பத்து ரூபாய்தான் கனம் இருக்குமா? கிண்ணத்தில் இருப்பது காற்றல்லவா? காற்று ஜலத்தைவிட மிகவும் இலேசானது. ஆகையால் கிண்ணம் மூழ்கிப்போகிறதில்லை. கிண்ணத்திற்குள் ஜலம் ஊற்றினால் சிறிது சிறிதாய் கீழே போக ஆரம்பித்து கடைசியில் முற்றிலும் மூழ்கிவிடும. ஜலத்திற்கு பதிலாய் ஒவ்வொன்றாய் சிறு கற்களைப்போட்டுக்கொண்டு வந்தால் அப்பொழுதும் முன்போலவே தான் ஆகும். ஜலமற்ற குடத்தை யாவது இலேசான செப்பையாவது ஜலத்துள் கவிழ்த்தால் மிதப்பதற்குக் காரணமும் இதுவே. குடத்தில் அல்லது செம்பில் ஒரு சிறு துவாரமிருந்தால் அதன் வழியே காற்று செல்லச் செல்ல ஜலம் உள்ளே நுழையவும் வஸ்து அமிழ்ந்து போவதைப்பார்க்கலாம்.

கப்பலை ஒரு பெரிய இரும்புக்கிண்ணம் என்று சொல்லலாம். அதிலும் கனம் அதிகமாய் ஏற்ற ஏற்ற அதிகமாய் ஜலத்தில் அடியில் அமரும். ஒவ்வொரு கப்பலும் மூழ்கிப்போகாமல் க்ஷேமமாய் சமுத்திரத்தில் போவதற்கு அதில் இவ்வளவு பாகந்தான் அடியே போகவேண்டும் என்றும், மற்றபாகம் ஜலத்திற்குமேல் மிதக்கவேண்டும் என்றும் ஒரு கணக்குண்டு. அவ்வளவு வரையில் கப்பலின் பாகம் ஜலத்தின் அடியில் செல்லும்படி அதில் சாமான்களையோ, மனிதர்களையோ ஏற்றலாம். அந்த எல்லைக்குமேல் கப்பலை சுமத்தமாட்டார்கள். அப்பொழுது ஜலம் கப்பலைமேல் நோக்கித் தாங்கும் சக்தியானது கப்பலின் கனம், அதிலுள்ள வஸ்துக்களின் கனம் ஆகிய இவற்றின் மொத்த எடைக்குச் சரியாயிருக்கும்.

ஒவ்வொரு படகுக்கும் கப்பலுக்கும் அதில் இவ்வளவுதான் பாரம் போடலாம் என்று நிர்ணயம் செய்து வைத்திருப்பார்கள். சில ஆறுகளில் பரசல் விடும்போது ஒருவர் அல்லது இரண்டுபேர் வந்தால் அவர்களையும் அதிகமான ஜனங்கள் வந்தால் அவர்களையும், பல சாமான்களையும் கணக்கில்லாமல் ஏற்றிக்கொண்டுபோய் அவஸ்தைப்படுவதுபோல கப்பல்களில் ஒருக்காலும் செய்யவே மாட்டார்கள். உதாரணமாக ஒரு படகு சரியான எல்லை வரையில் ஜலத்தில் அமிழ்ந்தால் 100 கன அடி ஜலத்தின் இடத்தை அடைத்துக்கொள்வதாக எண்ணுவோம். 100 கன அடி ஜலம் படகைத்தாங்கு

REGISTERED 18 APR 1911 OFFICE OF ... BOOKS MADRAS.

வதினால் இதன் பலத்திற்குத் தக்க அளவு பாரம் படகில் ஏற்றலாம். ஒரு கன அடி ஜலம் $62\frac{1}{2}$ பவுன் (lbs) ஆகையால் கப்பலில் சுமார் 6200 பவுன் வரையில் பாரம் ஏற்றலாம். இது சுமார் 250 மணுவு ஆகின்றது. இம்மாதிரியே பெரிய கப்பல்களுக்கும் ஏற்றவேண்டிய பாரம் இவ்வளவென்று கணக்குண்டு. பேபர்களில் (சுதேசமித்திரனில்) கப்பல்களின் போக்கு வரவைக் குறித்து நோடீஸ்கள் போட்டிருக்கும் பக்கத்தைப்பார்த்தால் நான் சொல்லும் விஷயம் நன்ருய்ப்புலப்படும். அதில் பின்வருமாறு எழுதியிருக்கும்:—

கப்பல்களின் பெயர்	பாரம் (Ton) டன்	பட்டணத்தை விட்டுப் புறப்படும் தேதி
கோல் கொண்டா	5874	14-நம்பர் 10
கொலாபா	6019	9-ஜனவரி 11
பர்ஷியா	7951	3-டிசம்பர் 10

பாரம் 5874 டன் என்ருல் அக்கப்பலில் 5874 டன் வரையில் பாரம் ஏற்றலாம் என்று அர்த்தம். கப்பல் சிறிது பெரிது என்பதை அது சுமக்கக் கூடிய பாரத்தைக்கொண்டு தான் நிச்சயம் செய்வது வழக்கம்.

☞ ஆர். கே. சுவாமி, பி-ஏ., எல்-டி.

நோயில்லாமல் வாழ்வதெப்படி?

நாகரீகம் வாய்ந்த நம்இளம்பெண்டிருரும் பிள்ளைகளும் 'காப்பி' குடியாமல் காலை 8 மணிவரையில் கூட இருக்க முடியவில்லை என்கிருர்கள். பசித்தபோது சாப்பிடுவது போய்—ஏதோ காப்பி குடிப்பதும், பிறகு சாப்பிடுவதும், அதன் பிறகு 'டீபன்' உண்ணுவதும்—கடிகாரத்தின் போக்கைப் போன்று ஒரு முறைமையான வேலையாய்விட்டது. காப்பியும், டீயும், கோக்கோவும் நாம் வேண்டாத அளவு நம்மவரை அடிமையாக்கிக்கொண்டு வருகின்றன.ஏ! ரஞ்சினி படிக்கும்மாது சிரோன்மணிகாள்! இல்லிற்கரசியர்களான நீவிர் கவனிக்கவேண்டிய முக்கியமான விஷயங்களில் இவை ஒன்று. நம் நாட்டில் பெரும் தீனியால் விளையும் கேடுகளுக்கு அளவில்லை யென்பதற்குச் சந்தேகமா?

அப்டன் ஸிங்கிலர் பட்டினி கிடக்க நேரிட்ட காரணத்தைச் சொல்லுகின்றேன். அவர் முதலில் வலிமையுடையவராகவே இருந்தார். உத்தியோக வேலைகளிலும் லௌகிக கருமங்களிலும் காலம் அதிகமாய்ச் செலவழித்தது பற்றி அவர் தேகத்தைக் கவனியாமல் அக்காலத்தில் போஜனம் செய்தல், சரியான உணவை உண்பதில்லை,—ஆகிய இவைபோன்ற தப்பிதங்கள் செய்தலால் அவருக்கு ஜீரணசக்தி குறைந்து வியாதி உண்டாயிற்று. ஒரு வியாதி பற்றிப் பல வியாதிகளும் அணுகின. கடைசியாய் பால் கஞ்சி இவற்

றைக் கூட ஜீரணம் செய்ய சக்தியற்றுப் போகவே என்ன செய்வது என்று தோன்றாமல் பல அவுஷதங்களும் பயனற்றவை என்று கண்டு பட்டினி கிடக்க ஆரம்பித்தார். அப்பொழுது அவர் பட்ட துன்பங்களையும், இன்னும் பலவிதமான அநுபவங்களையும் பற்றிச் சொல்லுகிறார். "முதல் நாள் எனக்கு உண்டான பசிக்கு அளவேயில்லை, பசி வயிற்றைப் பிடுங்க ஆரம்பித்தது. அதைப் பொறுத்துக் கொண்டு முதல் நாளைக் கழிக்கவே இரண்டாநாள் வெகுவாய்க் குறைந்து விட்டது. அதன் பின் பசி என்பதே சிறிதுமில்லை. என்ன ஆச்சரியம்!! பட்டினி கிடப்பதற்குத் தொடங்குவதற்குமுன் இரண்டு மூன்று வாரமாய் தலைவலித்துக் கொண்டே இருந்தது. அத்தலைவலிமுதல் நாள் முழுவதும் இருந்தது. பிறகு தலைவலியே காணவில்லை! இரண்டாம் நாள் தேகவலிமை குறைந்துபோனது பற்றி எழுந்தால் தலை சுற்றும்; எழுந்து காற்றாட வெளியே போய் வெய்யலில் படுத்துக்கொண்டு நாள் முழுவதும் படித்துக்கொண்டிருந்தேன். இம்மாதிரியே 3, 4, நாளும் இருந்தது. தேகத்தில் மட்டும் பலம் இல்லை என்பது மட்டுமே ஒழிய மனம் வெகு தெளிவாய் இருந்தது. 5 நாள் கழிந்தபின் சற்று பலம் வருவது போல் தோன்றிற்று. அதிகமாய் நடப்பது மன்றி எழுதவும் ஆரம்பித்தேன். இவையெல்லாம் எனக்கு ஆச்சரியமாய் இருந்த போதிலும்—எல்லாவற்றையும் விட ஆச்சரியமாய் இருந்தது, என் மனத்தின் ஊக்கமும், சுறுசுறுப்பும், இது வரையிலும் நான் ஒரு நாளும் செய்திராத அளவு எழுதவும் படிக்கவும் எனக்கு சக்தி உண்டாயிற்று. பட்டினி கிடந்த நாட்களில் வெகு நன்றாய்த் தூங்கினேன், ஒவ்வொரு நாளும் நடுமத்தியானம் தேகத்தில் பலக் குறைவு தோன்றும். அப்பொழுது தேகத்தை நன்றாய்த் தேய்த்து ஸ்நானம் செய்தால் உடனே தேகத்தின் ஆயாசம் நீங்கிவிடும். இவ்வாறு!! நாள் பட்டினிகிடந்த பிறகு நடக்கும் போதேகால் ஒய்ந்துபோவது போல் தோன்றிற்று. படுக்கையில் படுக்க இஷ்டப்படவில்லையா கையால் பாரணை செய்துகொள்ள ஆரம்பித்தேன். முதலில் கொஞ்சம் ஆரஞ்சுபழத்தின் ரசம் சாப்பிட்டுவிட்டு பால் குடித்தாராம். இரண்டு மூன்று நாள் பால் மட்டும் சாப்பிடவே தேகம் பலப்பட்டதுமன்றி மன அமைதியும் புத்தித் தெளிவும் வெகு அதிகமாய் உண்டாயிற்று என்கிறார். வியாதியே முற்றிலும் அற்றது மின்றி இப்பொழுது அதிக பலவானாய் இருக்கிறார்—காண்டம் போரரி ரிவியூவிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது.]

பெருச்சாளி என்ன தேடுகின்றது?

ஒரு ஊரில் ஒரு பிச்சைக்காரனிருந்தான். அவன் எப்பொழுதும் எதாவதொரு, வேலைசெய்துகொண்டேயிருப்பான். கூலிக்குமாவரைப்பது, நெல்லு குத்துவது, பாத்திரங்கள் தேய்ப்பது, விறகு வெட்டுவது, கடையிலிருந்து சாமான்கள் வாங்கிக்கொண்டு வந்து கொடுப்பது முதலியவைகள் எது வேண்டுமானாலும் செய்வான். வேலையொன்றும் கிடைக்காவிட்டால் பிச்சையெடுப்பான. அரிசி, சோளம் கம்பு எது கிடைக்கிறதோ அதை விற்று காசு சேர்ப்பான், அவன் தன் குழந்தை குட்டிகளையும் கூட இவ்வாறுதான் செய்

யச்சொல்லுவான். சாயங்காலமானதும் பசங்கள் சம்பாதித்த காசுகளையெல்லாம் வாங்கி ஜாக்கிரதையாக பொட்ளம் கட்டி எங்கேயாவது ஒளித்துவைப்பான், அவன் வைத்த இடம் அவனுடைய பெண்சாதி குழந்தைகள் ஒருவருக்கும் தெரிவிக்கமாட்டான்.

அவன் எப்பொழுதும் எவரிடத்திலிருந்தாவது கேட்டு வாங்கிய கிழிசல் வஸ்திரங்களை அணிந்திருப்பான், பெண்ஜாதி குழந்தைகளுக்குங்கூட அத்தகைய கிழிசல் வஸ்திரங்களைத்தான் கொடுப்பான். வயற்றிற்குத் தின்கிற வயற்றெரிச்சலையோ கேட்கவே வேண்டியதில்லை. தண்ணீரில் போட்ட சோறு இரண்டு பிடியும் ஒரு மிளகாய் அல்லது ஒரு வெங்காயம் தான். என்றைக்காவது ஒரு நாள் குழம்பு செய்தால் அன்றைக்கு பெரும்பாக்கியம் தான். அதுவும் பகல் பொழுதில் மாத்திரம் தான். இரவில் இராப்பிச்சையெடுத்து ஏதாவது கிடைத்தால் தின்கவேண்டும், இல்லாவிடில் பட்டினி கிடக்கவேண்டும், இவனும் அவர்களுடன் இரவில் 12 மணிவரையில் பிச்சையெடுத்தலைவான். தம்பிடிகளை அணுவாகவும், அணுக்களை ரூபாயாகவும் ரூபாய்களை பவுன்களாகவும் செய்து, அவன் ஏராளமான பவுன்களை சேகரித்து ஒவ்வோரிடத்திலும் கொஞ்ச கொஞ்சமாக புதைத்து வைப்பான். புதைத்து வைத்த இடத்தை யாருக்கும் தெரிவிக்கமாட்டான்.

ஒரு நாள் அவன் பவுன்களை புதைத்து வைக்கும் பொருட்டு குழி வெட்டினபொழுது அவனுக்கு ஒரு குடம் நிறைய பொன் கிடைத்தது. அதையும் அவன் இடம்மாற்றி புதைத்து வைத்தான்.

ஜனங்களுக்கும் கூட இவன் நிஜமாய் பிச்சைக்காரனன்று, என்கிற சமுசயமுண்டாகத் தொடங்கியது. "இவனிடத்தில் ஏராளமான பொருள் இருக்கின்றது. இவனுக்கு பிச்சையும் கூட போடலாகாது" என்று அவனைக் கண்டால் எல்லோரும் பரிகாசம் செய்வார்கள்.

சிலசமயங்களில் ஆராவது அவனிடத்தில் பணம் கடன் கேட்பார்கள், அவன் பக்கா வஸ்தாதாயிருந்தபடியால் ஒருவருக்காவது தன்னிடம் பணமிருப்பதாகக் காட்டிகொடுக்கவும் மாட்டான். ஒரு காசு கொடுக்கவும் மாட்டான். எந்தெந்த வியாபாரிகளிடத்திலிருந்து இவன பவுன் விலைக்கு வாங்கியிருக்கிறானே அவர்களெல்லோரும் இவனைக் கண்டால் பரிகாசம் பண்ணுவார்களென்று, இவன் தனது முகத்தையும்கூட அவர்களுக்குக் காண்பிக்கமாட்டான்.

ஒரு நாள் அவனுடைய பெண்ஜாதி பயந்து பயந்துக்கொண்டே தன் கணவனிடம் வந்து "நம்மஅப்பூ இப்பொழுது பெரியவனாயிருக்கிறான், அவனுக்கு விவாஹம் செய்யவேணும். அவன் இப்பொழுது நன்றாக வேலை செய்கிறான்" என்றாள். அதற்கு இவன் அவள் பேரில் சிள்ளென்று விழுந்து "உனக்கென்ன பயித்தம் பிடித்திருக்கிறதா? இன்றைக்கு இவனுக்கு கலியாணம் பண்ணினால், மருமகன் மருமகள் இவர்களும் தங்களுக்குக் கலியாணம் செய்துவைக்கச் சொல்லுவார்கள். உறவினர்களையெல்லாம் சாப்பிடக் கூப்பிடவேண்டிவரும். இவ்வளவு செலவும் நான் எங்கிருந்து செய்பட்டும்? அதுக்கென்ன கலியாணம் ஆகிறது? ஒரு தடவை அப்பூவின் கலியாணம் செய்தால், நம்மிடத்தில் பணமிருக்கிறதென்று ஜனங்களுக்குத் தெரிந்துவிடும். பிறகு அவர்கள் இல்லாத காரணங்களையெல்லாம் சொல்லி நம்மிடத்திலிருந்து பணம் பிடுங்குகிறவழியைத் தேடுவார்கள். நாம் பணம் கொடுக்காவிட்டால் அவர்களுக்கு கோபம் வரும். வீணாக சண்டை சச்சரவு வுண்டா

கும். உனக்கு அதைப்பத்தி ஒன்னும் ஆவசியமில்லே. எல்லாம் எனக்குத் தெரியும். நீ வாயை மூடிக்கொண்டிரு" என்றான். பாவம் பெண்ஜாதி பேசாமலிருந்து விட்டாள்.

ஒருதடவை இவன் ஒரு வியாபாரியினிடத்திலிருந்து ஒருபவுன்விலேக்கு வாங்கினான். அதைப்பார்த்துக் கொண்டிருந்த பிச்சைக்காரனொருவன் இவனிடம் வந்து ஒருகாலணா பிச்சைக்கேட்டான்.

"நான் மூன்று தினங்களாய் பட்டிணியாயிருக்கிறேன். எனக்கொரு காலணா கொடுங்கள், இல்லாவிட்டால், அவல் பட்டாணிக்கடலே ஏதாவது வாங்கிக்கொடுங்கள் அதைத்தின்று கொஞ்சம் பசியையாற்றிக் கொள்ளுகிறேன், உங்களுக்கு ரொமபவும் புண்ணியமுண்டு, கடவுள் உங்களுக்கு ரொம்ப பாக்கியம் கொடுப்பார்" என்றான். அதற்கு இவன் என்ன சொன்னான்? "கடவுள் எனக்கு ரொம்ப பாக்கியம் கொடுக்கும் பக்ஷத்தில் அதை ஏன் அவர் உனக்குக் கொடுக்கக்கூடாது? கடவுளுக்கு உன்பேரில் கோபம் அதனால்தான் கடவுள் உன்னை பிச்சைக்காரனாக செய்திருக்கிறார். அப்படியிருக்க நான் உனக்கு காசு கொடுத்தால், கடவுள் என்பேரில் கோபித்துக்கொள்ளுவார்" என்று சொல்லி பிச்சைக்காரனை வாயடித்து அனுப்பிவிட்டான். அவன் ஜன்மத்தில் அவன் ஒற்றைக்காசும் கூட தர்மமென்று செய்திலன்.

இவ்வாறாக அவன் காலத்தைக் கழித்துக் கொண்டிருக்கையில், ஒரு தடவை அவனுக்கு பெரும் வியாதிவந்தது. தற்சமயத்திலும்கூட மருந்தின் பொருட்டும் கூட ஒருகாசும் சிலவழிக்கவில்லே. இப்படியிருந்து கடைசியாய் அவன் பிராணன் போய்விட்டது. அவன் கடவுளினிடம் போனபிறகு, கடவுள் அவனைக் கேட்டார். "நான் உனக்கு ஏராளமான பணம் கொடுத்திருந்தேனே. அதை நீ என்ன செய்தாய்?" அதற்கு இவன் பின் வருமாறு விடையளித்தான்.

"நான் வயிற்றிற்கும்கூட வயிறு நிரம்ப தின்கவில்லே. பெண்ஜாதி குழந்தைகளையும் தின்கவிடவில்லே. பணமெல்லாம் அப்படியே புதைத்து வைத்திருக்கிறேன். என்னை மன்னித்தால் அடுத்த ஜன்மத்தில் நான் அதை நல்ல வழியில் சிலவழிப்பேன்"

கடவுள் சொன்னார் "இப்பொழுது மன்னிப்புக்கேட்கிறாயா? மோசக்காரன் குற்றத்தில் சிக்கிக்கொண்டானானால், இல்லாத பாசாங்குகளெல்லாம் செய்து, இனிமேல் குற்றம் செய்வதில்லேயென்று சொல்லி, காலில் வந்து வீழ்ந்து தப்பித்துக்கொள்ள முயலுகிறான். ஆனால் அவனை யார் நம்புவார்கள்? அவனுக்கு தண்டனை விதிக்கவேண்டும். அதை அவன் அதன் துக்கத்தைப் பொறுத்துக்கொண்டு, வாயைத்திறவாது அநுபவிக்கவேண்டும், போ இப்பொழுது உனக்கு பெருச்சாளியின் ஜன்மத்தைக் கொடுத்திருக்கிறேன். உனக்கு இவ்வளவு பொருள் கொடுத்திருந்தும் நீயதை நல்லவழியில் சிலவழிக்கவில்லே. ஆதலால் உனக்கு முகத்தைக் காண்பிக்க யோக்கியதையில்லே. நீ பகலில் வெளியில் வருவாயாகில் பார்ப்பவர்களெல்லோரும் உன்னை கல், தடி, முதலியவைகளால் அடித்துக்கொன்று விடுவார்கள். இரவில் மாத்திரம் வெளியில்வா. நீ பணத்தை நல்லவழியில் சிலவழிக்கவில்லே என்பது நீ ஜன்ம ஜன்மத்திலும் மறக்காமலிருக்கவேண்டும். அந்த பணத்தை நீ எங்கே வைத்திருக்கிறாயென்பதை நீ மறந்து விடும்படி செய்திருக்கிறேன். அதை நீ தேடும்பொருட்டு இரவுகளில் நிலத்தை அங்குமிங்கும் தோண்டிப்பார்த்துகொண்டே உன் ஜன்மத்தை கழிப்பாய். இந்த தண்டனையை அநுபவித்து

பொருளை நல்லவழியில் செலவழிக்க வேண்டுமென்கிற எண்ணம் உன் மன தில் உறுதியாய் வேரூன்றினபிறகு, பெருச்சாளியின் ஜன்மத்தின் பிறகு மறு படியும் உனக்கு நல்ல ஜன்மம் கிடைக்கும்" இவ்வளவு பேசி முடிப்பதற் குள் அவன் பெருச்சாளியாய்விட்டான்.

சிறுவர்களே! நீங்கள் பெருச்சாளியைப் பார்த்திருக்கக்கூடும். அது பக லில் யார் கண்ணிலாவது தென்பட்டால் உடனே அதைக்கொன்றுவிடுகிறார் கள். உலகத்தில் முகத்தைக்காண்பிக்க அதற்கு யோக்கியதை கிடையாது. எப்பொழுதும் ஒளிந்திருந்து இரவுகளில் வெளியில் வந்து கண்டவிடமெல் லாம் தோண்டவேண்டியதா யிருக்கின்றது. ஏன் அப்படி? என்றால், கடவுள் கிருபையினால் கிடைத்தபொருளை நல்லவழியில் செலவழிக்கவில்லை என்பதே.

☞ மங்களாபாய்.

சேர்ந்தவாழ்வே சிறந்தவலிமை.

இப்பிரபஞ்சத்திற் பிறந்து வளர்ந்து இறக்கின்ற மானிட சென்ம மெடுத்த நமக்கு யாதொரு துணைவனில்லாவிடில் ஜீவிக்கமுடியாது. நாம் ஒரு வருக்கொருவர் சண்டை சச்சரவு செய்யாது ஒற்றுமையாயிருப்பின் சுக மாய் வாழலாம். அப்படியிராவிடின், நிலைகுலைந்து, மனந்தடுமாறி, பெருஞ் சண்டையுண்டாகி பெருஞ் சேதத்தை விளைவிக்கும். ஏன் சிறுதீவாகிய ஜப் பான் தேசத்தில் வசிக்கும் சொற்பத்தொகையுள்ள ஜனங்கள் அகன்று விசாலமுள்ளருஷியா ஜனங்களைத் தோற்கச்செய்தார்கள்? அவர்களுடைய ஒற்றுமையாற்றான். ஏன் ஜப்பானியர்கள் வர்த்தகத்தில் முதன்மை பெற் றிருக்கின்றனர்? அதுவும் அவர்களுடைய இணைபிரியாத ஒற்றுமையாற்றான். அவர்கள் செய்யும் பீங்கான் சாமான்கள் சகல விடங்களிலும் வியாபார மாகின்றன. ஜப்பானியர் தங்கள் தேசத்தை முன்னுக்குக்கொண்டுவரப் பல நாள் யோசித்து வர்த்தகமே பிரதானமான தென்று கண்டு பலரும் ஒற்று மையுடன் உழைத்து சில சாமான்களைச்செய்து இந்தியாவிற்கனுப்ப அவை யேற்றுக்கொள்ளப்பட்டது. சில நாட்கள் சென்ற பின்னர், உபயோகமற்ற சாமான்களை யனுப்பத்தொடங்க, இதுகண்ட தேசாபிமனிகள் சிலர் ஒன்று சேர்ந்து, ஏகாந்தமான ஓரிடத்தில் கட்டிடமெழுப்பி அங்குசெய்யப்படும் சாமான்களை ஒன்றுசேர்த்து உபயோகமற்றவைகளை விட்டு அனுப்பத்தொட ங்கினார்கள். இவ்வளவுதூரம் நடப்பதற்கு காரணமென்ன? ஒற்றுமையே. இதுகண்ட சீனர்களும் வர்த்தகஞ் செய்யத்தொடங்கி ஜப்பானியருக்கிரண் டாவதாக விருக்கின்றனர். இவர்களை இப்படிப்பட்ட நிலைமைக்குக்கொண்டு வந்ததென்ன? ஒற்றுமை "முண்டனுக்கு இரண்டுபேர்" என்பது இருவர் சேர்ந்து ஒரு பலவானைவென்று விடலாம்.

ஒற்றுமையாயிருப்பதில் பலர் ஒருங்குகூடி ஒரு காரியத்தை யுத்தேசி த்து நானிந்த காரியத்தை தீர்த்த பின்புதான் வேறு வேலையில் புகுவது என்று உறுதியுடனிருக்க வேண்டும். ஓரிடத்தில் கடவுளானவர் பாவம் தான் செய்வேனென்றொருவன் உறுதியுடனிருந்தால் அவனுக்கு சொர்க்கங்கொடுப் பேனென்று சொல்லியிருப்பதால் உறுதியே மேலானது. அந்தக் காரியத்தை

யென்னால் செய்யக்கூடுமென்று உறுதியுடனிருந்தால் செய்துவிடலாம். அது என்னால் முடியாதென்றால் அவனால் முடியாது தான். நாமிப்பொழுதேறிச் செல்லும் புகைவண்டி யாரால் கண்டு பிடிக்கப்பட்டது? ஜார்ஜ்ஸ்டீபன்சன் என்னும் எளிய ஆங்கிலேயனால் கண்டுபிடிக்கப்பட்டது. இவன் தான் மணிக்கு 20 மைல் ஓடக்கூடிய இயந்திரத்தைக்கண்டு பிடிப்பதாகச்சொன்ன சமயத்தில் ஜனங்கள் ஏளனஞ்செய்ய எப்படி சித்தியாயிற்று? உறுதியால் சித்தியாயிற்று. ஸ்ரீராம கிருஷ்ணபரம ஹம்சர் காசைக் கையினால் தொடுவதில்லை என்ற உறுதியின் பயனென்ன? அவர் தூங்குஞ்சமயத்தில் யாராவது காசைக்கையில் வைத்தால் கைவளைந்துவிடும். இதனால், உறுதியுடனிருந்தால் நரம்புகளெல்லாம் உறுதியின் கைவசத்திலகப்படுகின்றது. இதோடு சமயோசித புத்தியும் வேண்டும். ஆகையால் காரியம் ஒற்றுமை. முதற்காரணம் உறுதி. துணைக்காரணம் சமயோசித புத்தி. ஒற்றுமையாயொரு காரியத்தை நடத்தும்பொழுது "ஊக்கமது கைவிடேல்" என்பதையும், "ஊக்கமுடைமை ஆக்கத்திற்கேது" என்பதையும் மனதிற்பதித்து, "ஆத்திரப்படேல்" என்பதையும், "அவசரக்காரனுக்கு புத்திமட்டு" என்கிற அரியசெய்யுளை மனதிற் பதிக்கவேண்டும். ஆகையால் ஒவ்வொருவரும் நல்லொழுக்கத்தில் பிரவேசித்து ஒற்றுமையுடன் வாழ உய்யக்கடவர். ☞ ஈ. கே. சி.

சிறுவர் சிறுமியர்களுக்கான கதைகள்.

ஜான்மே நார்ட் என்னும் மாலுமி, தன்னிட மிருந்த புகைக்கப்பல்களைக் கொண்டு வட அமெரிக்காவிலுள்ள பெரும் நதிகளையும், ஏரிகளையும் கடந்து அவற்றை நடத்தத்தானே யுழைத்துவந்தான்.

அநேகவருஷங்கள் உழைத்தபிறகு, அவன் தைரியமுள்ளவனும், சாமர்த்தியமுள்ளவனும் எவனும் அவன் நன்றாய் வேலை செய்கிறானென்று நம்ப எப்பொழுதும் முடியும் என்று தோன்றினன்.

அவனது அற்பதூரப் பிரயாணங்களி லொன்றாகிய ஈரி (Erie) என்னும் ஏரியைக் கடப்பதற்காக, சாமான்களும், ஜனங்களு மடங்கிய புகைக் கப்பலை நடத்த கப்பலோட்டியாக அவன் நியமிக்கப்பட்டான். இப்பொழுது இன்பத்தைத்தரத்தக்க தென்றல் வீசும் கோடைகால மத்தியானநேரத்தில் ஒருவர்மனதிலும் அபாய மில்லாததைப்பற்றி நினைவில்லாதகாலத்தில், கீழேயிருந்து புகைப்படலங்கள் ஆகாயத்தை யளாவி யெழும்பின. இச்சமயத்தில் கப்பல் தலைவன் ஒருவனையனுப்ப அவன் வெளுத்த முகத்துடன் வந்தான். நெருப்பு சாமான்களில் பிடித்துக் கொண்டது என்றான்.

நெருப்பு! நெருப்பு! என்று பிரயாணிகள் கூச்சலிட்டார்கள், சிறிதுநேரத்திற்கெல்லாம் அவர்கள் தலைவனது ஆணையை மீறி நடக்கத் தலைப்படவே அவர்களை யடக்கி அவன் உத்தரவின்பேரில் நெருப்பின்மேல் ஜலம் ஊற்றப்பட்டது. ஆனால் ஒன்றுஞ் சித்தியாகவில்லை.

"நாம் துறைமுகத்திலிருந்து எவ்வளவுதூரம் வந்திருப்போம்" என்று ஜானைக்கேட்டான் "சுமார்குறைந்தது ஏழுமைல்களிருக்கும்"

"அங்கு கொண்டுபோய்ச் சேர்க்க எவ்வளவு நேரஞ் செல்லும்"

"குறைந்தது முக்கால் மணிநேரஞ்செல்லும்" ஜான் கப்பலை நடத்த சென்றபொழுது, தலைவன் பிரயாணிகளைக் கப்பலின் முன்புற மனுப்பினுன். நெருப்புசுவாலைகள் அவனை நெருங்கிக்கொண்டிருந்தது. அவன் மூச்சுவிட முடியாமல் அப்படி அவனை புகை சூழ்ந்துகொண்டது.

கப்பற்றலைவன் அவனைப்பார்க்கக் கூடாததால் பேசக் கூடியதூரத்தி லிருந்து, "ஜான், நீ என்ன கப்பலை நடத்துமிடத்திலா நிற்கிருய்" என்ருன்.

"ஆம், ஆம்" "எந்தப்பக்கம் தரைக்குக்கிட்ட விருக்கின்றது?"

"வடகிழக்கு"

"அப்படியானுல் வடகிழக்குப்புறமாய் நடந்தது. ஜானின் தலைமயிர்கள் பொசுக்கப்பட்டுக் கொண்டிருந்தன, அவன் கைகளிலொன்று உதவியற்றுத் தொங்கிற்று. இன்னும் அலங்கோலமாய் அவன் பாறைபோல் நின்ருன்.

கப்பல் கரைசேர்ந்தது. எல்லாரும் காப்பாற்றப்பட்டார்கள், ஆனுல் ஜான் எரிகிற பலகையின்மேல் இறந்து விழுந்தான்.

ஆ! என்னதைரியம்; என்ன சாமார்த்தியம்! பர்வதம்போல் பயப்படக் கூடிய படுகாயப்படுத்தும், பற்றியெறிகின்ற பலகையின்மேல் நின்று புகை க்கப்பலை நடத்தித் தனதுயிரையும் கவனியாது லட்சக்கணக்கான உயிர்களைக் காப்பாற்றினவன் சாமர்த்தியமே சாமர்த்தியம்! என்ன வீரத்தனம்! என்ன கெட்டித்தனம்! இவனையல்லோ பரோபகாரியென்பர். ஆகையால் ஒவ்வொரு வரும் இவனைப்போல நடக்கக்கடவர்.

——(‡)——

ஒரு ஆற்றில் ஒரு ஆழமில்லாத குளமிருந்தது. அதில் மூன்றுமீன்கள் வாசஞ்செய்துகொண்டிருந்தன. ஒரு மீன் செம்படவன் தன்னைப்பிடிப்ப தற்கு ஏற்பாடுசெய்வதாகக் கேள்விப்பட்டு தன்நேசர்களிடஞ்சென்று, 'என் னருமை நேசர்களே! நம்மைப்பிடிப்பதற்கு வலைஞன் ஏற்பாடுசெய்துகொண் டிருக்கிருன்,நாம்சீக்கிரம்ஆழமானவிடத்திற்குச் சென்று சுகமாயிருப்போம்"

இரண்டாவதுமீன், "வலையன் இன்னும் ஆயத்தமாயில்லை. அவன்இன்று வரமாட்டான். நமக்குவேண்டியநேர மிருக்கின்றது. நாம் தப்பிக்கவேண்டிய நேரமிருக்கின்றன. அவன் வலையை வீசினுல் நாம் தப்பிக்க வழிதேடிக் கொள்ளலாம். நாம் அவசரப்படக் காரணமில்லை."

அதிகச் சோம்பலையுடைய மூன்ருவது மீன்; "இங்கிருந்தால் என்ன கெடுதிசம்பவிக்கும்? நாம் ஏன் சங்கடப்படவேண்டும்? நாளையொரு நாளிருக் கிறது. அவசரமேனன்டையவேண்டும்." இவற்றை யுரைத்தபின்புதான் தூங் கப்போயிற்று.

வேலைசெய்யக் கூடியதும், புத்திசாலித்தனமுமான முதல்மீன், "நீ இன்றைக்குச் செய்யவேண்டியதை நாளைவரையிலும் வைத்துவிட்டாய். நீ இப்படி தள்ளிவைத்துக்கொள்வ துனக்கே தீங்காய் விளையும். நீ பிடிப்பட்டு காலன் கையிலகப்பட்ட வுயிர்போல் துடிக்கும்பொழுது, நான் சொல்லிய வற்றை நினைத்துக் கல்லுங் கரையக்கரைய உருகி யுருகி யழுவாய்." என்று மறுமொழி கூறிற்று.

தான்சொல்லி முடிந்தவுடன் அவர்களிட மிருந்து உத்திரவுபெற்றுக் கொண்டு பாய்கின்ற ஆற்றில் புகுந்து அதனுல் கூடிய மட்டும் நீந்திச்சென்று தனக்கு பத்திரமுள்ள ஆழத்திலிருந்தது.

அது சென்றவுடன் வலையன் தன்வேலையைத் தொடங்கவே, இரண்டும் ஒருமுறைபி லகப்பட்டது. இரண்டாவது மீன் அவன் கை நழுவி தண்ணீ

ரில் விழுந்து, பயமேலீட்டால் தோழனிருக்கு மாழமான விடஞ்சேர்ந்து, தான்பிழைத்துவந்ததிற்காக கடவுளை ஸ்துதிசெய்தது.

மூன்றாவது, மிகச் சோம்பலுள்ள தாகையால் அவனுக்காகாரமாயிற்று.

ஏதாவது பாடம் கொடுத்திருந்தால் இன்றே முடித்து நாளைக்குச் செய்வேன் என்பதைமறக்கவேண்டும். அப்படிச் செய்யாவிடில் அவருக்கே தீங்காய் முடியும். ஆகையால் ஒவ்வொருவரும் ஜாக்கிரதையுட னிருப்பார்களாக.

☞ தாதா.

மகாவிகட விநோதக்கதைகள்

1. ஒருமாதும் ரயில் வேலைக்காரனும்:—"அப்பா, எப்பொழுது 9-மணி வண்டி வரும்? என்று ஒருமாது மூட்டைதூக்குகிறவனைக் கேட்டாள். அவன் "அம்மா, 9-மணி வண்டி 8-மணி அடித்து 60 நிமிஷத்தில் வரும்" என்று சொன்னான்.

2. ஒரு பிரபு நிலக்கரிச் சுரங்கத்திற்குச் சென்று என்னவிலை என்று கேட்பதற்கு ஒருவனை நோக்கி, "நிலக்கரி எப்படி இருக்கிறது" என்றுகேட்க, அவன் "நிலக்கரி எப்பொழுதும் கருப்பாய்த்தானிருக்கிறது" என்றான்.

3. ஒருபையனும் மாதும்:—ஒருபையன் தெருவில் அழுவதைப்பார்த்து இரக்கமுள்ள ஒருமாது, "ஏன் அப்பா அழுகிறாய்?" என்று கேட்க, "என் காசு கெட்டுப்போச்சு" என்று அவன் சொன்னான். "அழாதே, அந்தக்காசு போகட்டும். இதைவைத்துக்கொள்" என்று ஒருகாசைக்கொடுத்துவிட்டுபோக, அவன் அதிகமாயழுவதைப்பார்த்து, "ஏன் அழுகிறாய்" என்றாள். அவன் "நான் அந்தக்காசு கெட்டுப்போகாமலிருந்தால் இரண்டு காசாகுமே" என்றான்.

4. நாயுள்ள வொருவனும் மற்றொருவனும்:—ஒருவன் வழியிற்சென்ற ஒருவனைப்பார்த்து, "ஒன்று, ஒன்றரை, அல்லது இரண்டுவயதுள்ள வொரு நாயைக்கண்டீரா" வென, அவன், "ஆம் ஒன்று, ஒன்றரை, இரண்டுமணி நேரத்திற்குமுன் கண்டேன். அது ஒன்று, ஒன்றரை, இரண்டுமைல்தூரஞ் சென்றிருக்கும். அல்லது ஒன்று, ஒன்றரை, இரண்டு அடி கூடச் சென்றிருக்கும்" என்றான்.

5. அழுகிறபையன்:—அப்பா, சாமி, ஏன் அழுகிறாய்? என்று ஒரு தாயார் கோயிலிலிருந்து வந்த பையனைக்கேட்க, அவன், "அம்மா நாம் மறுபடியும் பிறக்கவேண்டுமாம், நான் பெண்ணாய் பிறந்தா லென்னசெய்வதென்றழுகிறேன்" என்றான்.

6 பாபி (Bobby) பூனையைச் சவுக்காலடிக்கவில்லை:—தாயார் பாபியிடத்தில் "வில்லிவிப்லஸ் (Wiffles) அந்த பூனையை சவுக்காலடித்தான். என்னுடைய பையன் அப்படிச்செய்யான்" என்றாள். பையன் "இல்லை, உண்மைதான்" என்றான். "அப்படியானால், நீயேன் தடுக்கவில்லை" "இல்லையம்மா அப்பொழுது நான் படுத்துக்கொண்டிருந்தேன்.

☞ ஈ. கே. சி.

உபாத்தியாயர் பக்கம்.

சுலபமான

சாஸ்திர விஷயங்கள்.

A. இயற்கைப் பொருட்களில் காணப்படும் சாதாரண சக்திகள் (the familiar forces of nature)

(a) பாரம்: பூமியின் ஆகர்ஷண சக்தி (gravity.) இது எங்கும்பரவியிருத்தல். மேல், கீழ், திகந்தம், செங்குத்து என்னும் பதங்களின் அர்த்தம். தூக்கு குண்டு, நீர் மட்டப்பலகை.

(b) அணுக்களின் பற்று: ஸம்ச்லேஷம், ஆச்லேஷம் (cohesion and adhesion.) இது அதிக சமீபத்தில் மட்டும் பலித்தல். இரும்புத் துண்டுகளை காய்ச்சி அடித்தல். செங்கல் செய்தல். நீர்த்துளிகளின்வடிவம். சன்ன குழாய்களில்ஜலம்ஏறுதல்; தந்துக ஆகர்ஷண சக்தி (capillary attrac-tion.)

(c) பரமாணுக்களின் பற்று: ரசாயன ஆகர்ஷணம் (chemical attraction. சேரும் வஸ்துக்களின் குணமும் சேர்க்கைப்பொருளின் குணமும் வேறுபடுதல். துருப்பிடித்தல், விளக்கு எரிதல். மேற்கூறிய சக்திகள் இன்றியமையாதன.

B. (a) பதார்த்தங்களின் மூன்றுவித நிலைமையும், அவற்றின் குணங்களில் ஒற்றுமை வேற்றுமைகளும். கனபதார்த்தங்கள்உருவமும் அளவும் எளிதில் மாறா. த்ரவ பதார்த்தங்கள் உருவம் மாறும் அளவு எளிதில் மாறாது. வாயு பதார்த்தங்கள் உருவமும் அளவும் எளிதில் மாறும். த்ரவ பதார்த்தங்கள் சமபரப்புள்ளவை, வாயு பதார்த்தங்கள் எங்கும் பரவும் தன்மையுள்ளன.

(b) இத்தன்மைகள் மாறுபடுதல். கற்பூரம், ஜலம், ஈயம்.

C. கன பதார்த்தங்களின் முக்கிய குணங்கள்.

(a) நெகிழ்ந்து உரமூந்தன்மை,ஸ்திதிஸ்தாபகம் (Elasticity.) இழுத்தல், வளைத்தல், முறுக்குதல். விட்டங்களையும் தண்டவாளங்களையும்உபயோகிக்கும் விதம். பாலத்தின் உறுதியும் அதன்மேற்செல்லும் பளுவின் பரிமாணமும். வண்டியின் வில்லுகள, கடிகார வில்லுகள். இத்தன்மை மாறுபடுதல்.

(b) கம்பியாக இழுக்கப்படுதல்: கம்பித்துவம். கம்பிகள் இழுக்கும் விதம்: உம்லாகக்கம்பிகள். கம்பிகளின் பலம்.

(c) தகடாக அடிக்கப்படுதல்: விஸ்தரிக்கும் தன்மை.

D. ஜல மட்டம்: கால்வாய்களில் ஜலம் ஓடுதல், சமுத்திர ஜல மட்டம். பட்டணங்களில் நீர்க்குழாய்கள வைக்கும் விதம். நீர்மட்ட யந்திரமும் என்ஜினீர்களுக்கு உபயோகமும்.

☞ எலிமெண்டரி உபாத்தியாயர்களுச்காக சென்னையில் நான்கு முக்ய விடங்களில் தக்க கனவான்களால் இவ்வித அருமையான விஷயங்களைப் பற்றி பிரதி சனிக்கிழமை சாயங்காலம் உபந்நியாசம் செய்யப்பட்டுவருகின்றன. அநேக உபாத்தியாயர்கள் இவ்வித பிரசங்கங்களைக் கவனித்து தங்கள் அறிவை விருத்திசெய்துகொள்ள இதுவே தகுந்த சமயம். வெளியூர்களிலுள்ளவர்கள் இதன்படி புஸ்தகங்களைப் பார்த்தாவது தெரிந்தவர்களைக் கேட்டு தெரிந்துகொள்வது நலம். நமது பத்திரிகையிலுள்ள சாஸ்திரப் பாடத்தைச் செவ்வனே படித்துவந்தாலும் நலமே. ப. ர.

வியாதி நீங்காது வருந்துவோருக்கு கைகண்ட மருந்து. எளிதில் சொஸ்தப்படுத்துகிறது.

அடியிற்கண்ட சொஸ்தமாகாத வியாதிகளினால் கஷ்டப்படுகிறவர்களை உடனே சொஸ்தப்படுத்தும். அநேக பேர்பெற்ற டாக்டர்களால் இம்மருந்து பரிசோதிக்கப்பட்டு அடியில் வரும் வியாதிகளுக்கு இது நல்லமருந்தென்று நன்கு மதிக்கப்பட்டிருக்கிறது. எல்லாவிதசுரம், மலேரியா சுரம், நீண்டமண்ணீரல், பித்தாசயம், மகோதரவியாதி, பிளவை, மேகவெட்டை, கிரந்திப்புண், நீர்ரோகம், வாதம், இரத்தரோகம், முதலியவைகளை இந்த மருந்து சொஸ்தப்படுத்திவருகிறது.

Arayn Sarasaparilla.

ஆரியன்சரசபரிலா என்ற நன்னாரிவேர் சர்பத்து பலவீனர்களுக்கு பலத்தையும் புஷ்டியையும் கொடுக்கும்.

Medicateel Scentd Hair Oil.

மருந்துவகை சேர்ந்த வாசனைபொருந்திய கூந்தல் தைலம். வழுக்கைத் தலைக்கும், மயிர் வளரவும் உதவும். முகப்பருவு முதலியவைகளுக்கு வாசனையுள்ளமருந்தும் கிடைக்கும். இவைகளுக்கு சார்ஜ் நடுத்தரமானது, பொது ஜனங்கள் ஒருதடவை முயற்சி செய்யலாம், ஆர்டர் அனுப்பினால் உடனே சாக்கிரதையாக மருந்துகள் அனுப்பப்படும். இங்கிலீஷில் எழுதவேண்டும்.

Apply To:—The Manager. GANGULY FRENDS & Co.
27 1, Sham Bazaar Street, Bagh Bazaar P, O., Calcutta.

பிடித்தமில்லாதபோனால் ரூபாய் திருப்பி அனுப்பப்படும்.

எங்களுடைய பட்டில், மற்ற வியாபாரிகளைப்போல, நூலு கலப்பில்லை. 11 முழம் நீளம் 54 இஞ்சு அகலமுள்ள ஒருதான் பட்டின் விலை ரூ 8முதல் 25 வரை. பீதாம்பரச்சேலை:—16 முழம் நீளம் $2\frac{1}{2}$ அகலம் விளிம்பும் முந்தியும் ஜரிகைவேலை உடல்சாதா ரூ 18 முதல் 30 வரை. ரவிக்கைகள்:—ஓரங்களில் ஜரிகை வேலை செய்தது. உடலில் ஜரிகைப் பூக்கள் போட்டது. எல்லா நிறத்திலும் கிடைக்கும். ரூ. 2-12-0. முதல் 5 வரை. குழந்தைகளுக்கு பீதாம்பர வேஷ்டிகள்:—4 முழம் நீளம் $1\frac{3}{4}$ முழம் அகலம் நாலுபக்கமும் ஜரிகையினால் வேலை செய்தது ரூ. 3 முதல் 5 வரை. இன்னும் அநேக விதமான பட்டுபீதாம்பரங்களுக்காக எங்களுடைய கேட்லாக் வரவழைத்துப் பார்க்கவும். எம். டி. ப்ரதர்ஸ் அன்கோ கேபாலாநாலா பனாரஸ். பட்டு பீதாம்பரம் சொந்தமாக தயார் செய்பவர்கள்.

M. D. BROTHERS & Co.,
Bolanala, Benares City,

LADIES TOILET SPECIALIST.

Chemicals to increase the growth of eyelashess—bleaching and whitening powder for the face and hands.—Hair lengthening and blackenug wash—brightening drops for eyes—Internal complexionipills. Fat reducing solution—skin tightener for loose and flabby parts—Rs. 1 each—consultation on every other matters Solicited.

Dr. Prabhaker, Grant Road Bombay (American Graduate).

சமாசாரக் குறிப்பு.

மைசூரில் திக்கற்ற ஸ்திரீகளுக்கு கல்விபுகட்டி வரவும், அவர்களுக்கு அன்னவஸ்திர மளித்து வரவும் சில பிரமுகர்கள் ஒரு சபைகூடி ஒரு ஆசிரமம் ஸ்தாபிக்க யோசித்தார்களாம். இப்படிச்செய்வதால் அவர்கள் ஜன சமூகத்திற்கு பேருதவியாயிருப்பார்கள். அதாவது பெண்பாடசாலையில் உபாத்திமாராயிருக்கலாம்.

அமெரிக்காவில் 80 வயதுள்ள ஒருமாது அங்குள்ள ஒரு கலாசாலையில் சேர்ந்து படிக்க எண்ணங்கொண்டிருக்கிறாளாம். ஏன் இந்த வயதில் படிக்க வேண்டுமென்று கேட்டபோது, "யான் எவ்விஷயத்திலும் அடையக்கூடிய அறிவைப்பெற விரும்புகிறேன்" என்றாளாம்.

அலகபாத்தில் சென்ற டிசம்பர் மாதத்தில் கூடிய இந்திய மாதர்களின் சங்கத்தில் பாரிஸ்டர் மிஸ்டர் மணிலால் எம். டாக்டர் என்பவர் மோரிசுதீவிற்குக் கூலியாளாய்ச் செல்லும் இந்திய மாதர்களின் நிலைமை மிருகவினத்திற் கொப்பாய் மிகவு மிழிவானதாக விருக்கின்றதென்றும், அவர்கள் ஒன்றரை யிலட்சத்திற்கு மேற்பட்டிருக்கிறார்களென்றும், அவர்கள் விஷயமாகக் கவனங்கொள்ள வேண்டுமென்றுங் கூறினார்.

முடிசூட்டுத் தர்பார்:—இது அடுத்த டிசம்பர் மாதம் முதல் வாரத்தில் டெல்ஹிமா நகரத்தில் நடைபெறும். அப்போது மதசம்பந்தமான கிரியைகள் ஒன்றும் நடை பெறாவாம். பாதிரிகளது உதவியின்றி, ஜார்ஜ் அரசரும் மேரி அரசியும் தத்தம் மகுடங்களைத் தாமேதரித்துக்கொள்வார்களாம். முடிசூட்டுத் தர்பார் மண்டபத்தைக் கட்டவும் அலங்கரிககவும், மற்றக் காரியங்களைச் செய்யவும் ஒருகமிட்டி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ தாதாபாய் நௌரோஜியின் பேத்திப் பெண்கள் மூவர் இம்மாதம் 15உயில் மதுரைக்கு வந்திருந்ததாய்த் தெரிகிறது; அவர்கள் லண்டனிலிருந்து கொழும்புமார்க்கமாய் இந்நாட்டுக்குத் திரும்பிக்கொண்டிருந்தார்களென்றும், தூத்துக்குடியில் ரெயிலேறி அவர்கள் மதுரையில் இறங்கினார்களென்றும் அறிகிறோம். அவர்கள் மூவரும் வருவதாய்ச் சமாசாரம் தெரிந்து மதுரை வாசிகளில் சிலர் அவர்களை வரவேற்று மதுரை மீனாட்சியம்மன் கோயிலையும், திருமலை நாயக்கர் மாலையும், கோயில் தெப்பக்குளத்தையும் இன்னும் அவ்வூரில் விசேஷமாய்ப் பார்க்கக்கூடிய இடங்களையும் அவர்களுக்குக் கூடச்சென்று காட்டி அவர்கள் அவ்வூரைவிட்டுப் புறப்பட்டுப்போகிறவரையில் அவர்களை வெகு ஆதரவாய் உபசரித்தார்கள் என்று தெரிந்து சந்தோஷிக்கிறோம். அவர்களில் ஒருத்தி ஆக்ஸ்போர்ட் யூனிவர்ஸிடி பட்டதாரி. மற்றொருத்தி பாரிஸ் அகாடமி (Paris Academy) பட்டதாரி. பின்னுமொருத்தி வைத்தியம் படித்துத் தேர்ந்தவள். அவர்கள் மூவரும் அவ்வூரில் சில புடவைகளும் ரவிக்கைகளும் வாங்கினார்களாம். அவ்வூர் டெக்னிகல் ஸ்கூலிலிருந்து சில சாமான்கள் செய்து அனுப்பும்படியாய்க்கூட அந்த ஸ்கூல் சூபரிண்டெண்டண்டுக்கு ஆர்டர் கொடுத்தார்களாம்.

1885-ம் ௵ ஸ்தாபிக்கப்பட்டது.

எ ச் ச ரி க் கை !!

நீர்ச்சூலை, யானைக்கால் முதலியவைகளை சொஸ்தப்படுத்தக்கூடிய உலக முழுவதும் பேர்பெற்றவும் விலையுயர்ந்தவுமான எங்களது மருந்துகளில் சிலவற்றை போலிவைத்தியர்கள் சிலர் வீணான உத்தரவாதம் கொடுப்போம், சௌக்கியமடைவீர்களென புளிகிக்கொண்டுவிற்று வருவது எங்களுக்கு தெரிவருகிறது. அவ்வித மருந்துகள் கல்கத்தா 85, பெச்சு சட்டர்ஜி தெரிவிலுள்ள (மருந்துவியாபாரிகளாகிய) B. கோஷ் அண்டு கம்பெனியாருடைய டாக்டர் கோஷின் மருந்துகளல்ல.

எங்கள் மருந்துகள் சிவில் சர்ஜின் டாக்டர் சேம்பர்ஸால் ஆதரிக்கப்பட்டு வருகிறது.

டாக்டர் கோஷின் ஆச்சரியகரமான காட்சிப்பொருள்.

நீர்ச்சூலை, யானைக்கால், குடர்ப்பிதுக்கம்,

Varicocle, முதலியவைகளுக்குச் சிறந்த ஔஷதம்.

இந்தமருந்தை வெளியில் பூசினல் வியாதி நாள்பட்டிருந்தாலும் சரி எவ்விதமான வியாதியாயிருந்தாலும் சரி நிச்சயமாய் வியாதியை நீக்கிவிடும், ஒரு அவுன்ஸ் புட்டி விலை ரூ. 2—8. அ.

ஒருபவுன்ட் நிறையுள்ளது ரூ. 30. எங்களுக்கு அநேகர் சிறந்த நற்காட்சி பத்திரங்க ளளித்திருக்கிறார்கள். டாக்டர் சேம்பர்ஸ் ஆதரிப்பவர், நரம்பு தளர்ச்சி, பலவீனம் எவ்விதத்தால் உண்டானபோதிலும் சரி இந்த எண்ணெயை உபயோகித்தால் கிழவர்களும் வாலிபராய் விடுவார்கள். ஒரு அவுன்ஸ் புட்டி விலை ரூ. 2. இதற்கும் நற்சாட்சி பத்திரங்களுண்டு.

பலவீனத்திற்கு டாக்டர் கோஷின் மருந்து.

நரம்பு தளர்ச்சியை உறுதிப்படுத்தத் தக்கமருந்து.

சிலநாள் இந்தமருந்தை உபயோகித்தால் உடனே குணம் தெரியவரும் கண்பார்வை, உண்டாகும். தேகபல முண்டாகும், ஞாபகசக்தியை யுண்டாக்கும், கண்மங்கலை நீக்கும், நாட்பட்ட மேகவெட்டை, சுளுக்கு, சளி, கோழைமூத்திரவியாதிகள் முதலியவைகளை சொஸ்தப்படுத்தும், ஒரு புட்டி விலை ரூ. 1. அ. 8.

டாக்டர் கோஷின் உலகபிரசித்திபெற்ற நன்னாரிவேர் சர்பத்து (Sarasaparilla) ஒருபுட்டி விலை ரூ. 1.

வினோதமான மோதிரங்கள்.

ரசாயன சாஸ்திரப்பிரகாரம் செய்யப்பட்டவைகள், இடதுகையில் எந்தவிரலில் போட்டுக்கொண்டாலும் வியாதியுள்ளவர்கள் வியாதியின்றி சுகமாயும், சந்தோஷமாயும், சுத்த இரத்தத்துடனு மிருப்பார்கள், ஒரு மோதிரம் விலை ரூ. 1—8—0. டசன் ரூ. 12.

மேற்கூறிய மருந்துகளும் மோதிரமும் வேண்டியவர்கள் இங்கிலீஷில் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

B. GHOSE & CO,

CHEMISTS, (MODHOOR NEEKATUM)

85-1 Bechoo Chatterjee's Street, Calcutta.

வைத்திய சிகிச்சை செய்யும் தாதிகளின் ஸ்திதியையும் சம்பளத்தையும் உயர்த்தவும், அத்தொழிலை இன்னும் வெகு திறமையுடன் செய்தவரவும் ஏற்பாடு செய்யவேண்டிய அவசியமென்றும், இதற்காக இந்தியமாதர்களும், கனவான்களும் டப்ரின் நிதிக்கு திரவியசகாயம் செய்ய முன் வரவேண்டு மென்றும் லேடி மிண்டோ அவர்கள் தமது ஜன்மதேசத்திற்குப் போகுமுன் இச்சபை கடைசியாக கூடியகாலத்தில் சொன்னார்கள்.

மிஸ்ஸஸ் ஆல்மாலேப்பர்டி என்றமாது காலரடோ சட்டசபையில் ஒரு அங்கத்தினர், இம்மாது ஸ்திரீகளின் பார்லிமெண்டில் ஸ்தானம் பெறவும், இன்னும் தங்கள் இனத்தாருக்கு சுதந்தரம் பெறவும் முழுமனதுடன் உழைத்து வருகிறார்கள். சில துன்மார்க்கர்கள் இப்படி இம்மாது இவ்வளவு சுறுசுறுப்புடன் உழைத்து வருவதால் அவள் உயிருக்கே அபாயம் நெரிடுமென்று பல கடிதங்கள் பேன்சில் வானியாவிலிருந்து கை எழுத்தின்றி எழுதியனுப்பினார்களாம். சென்ற சட்ட சபைகூடிய மாறிகாலத்திலும் பல கடிதங்கள் கிடைக்தனவாம். இம்மாது முதலில் அனுப்பியவைகளைக் கவனிக்கவில்லையாம். ஆயினும் பின் அனுப்பியவைகளைப்பற்றி தபால் அதிகாரிகளுக்குத் தெரிவிக்கவே, அவர்கள் இவ்வித கடிதங்களையனுப்பிய துஷ்டர்களைக் கண்டுபிடிக்க முயன்று வருகின்றார்களாம்.

குணங்களில் விசேஷமானது பொறுமை, பொறுமையை ஒவ்வொருவரும் வகித்து வரவேண்டும். எவ்வளவு கஷ்டம்வரினும் அவைகளை அனுபவித்துக்கொண்டு பொறுமையுட னிருக்கவேண்டும். சிறிதேனும் இடங்கொடாமல் வருத்தங்களைப் பொறுத்துக் கொண்டிருப்பவர்களே பொறுமையுள்ளவர்கள். தனது 5 அல்லது 6 சிறிய குழந்தைகளைச் செவ்வனே பாதுகாத்தும், தனது வியாதியஸ்தனான கணவனுக்கும் திக்கற்றதனது மாமனாருக்கும் வேண்டியதைச் செய்துவருகிற ஸ்திரீரத்னம் சாமான்னிய வஸ்திரத்துடனும் முகமலர்ச்சியுடனும் ஒரு விருந்துக்குவந்து போஜனமுண்டு தனது கஷ்ட நிஷ்டூரங்களில் சிறிதேனும் உரைக்காமலிருப்பவளே சிறந்த குணமாகிய பொறுமையையுடையவள்.

இம்மாதம் 1வ 11-மணிக்கு கூடலூரில் கவர்னர் மகமதியர்களின் பிரதிநிதிகள் சிலருக்கு பேட்டி கொடுத்தார். அவர்கள் மகமதிய சாதிப்பெண்கள் வாசிக்க அவ்வூரில் ஒருபள்ளிக்கூடம் வைக்கப்படவேண்டுமென்று தெரிவித்துக் கொண்டார்கள். அதற்கு அவர் முனிசிபல் சேர்மனையும் வித்தையிலாகாத் தலைவரையும் அவ்விஷய சம்பந்தமாய் யோசனை கேட்பதாய்ச் சொன்னார். மறுநாள் பிற்பகல் முனிஸிபல் ஆஸ்பத்திரியில் எட்வர்ட் ஞாபகச்சின்ன பிரசவ வைத்தியசாலைக்கு லேடிலாலி அஸ்திவாரக்கல் நாட்டினார். அன்று சாயங்காலம் கூடலூர் பழைய டவுனைச் சுற்றிப்பார்த்து வந்தார்கள். அன்றிரவு அவ்வூர் வாசிகள் அவரை உத்தேசித்து மைதானத்தில் நடத்திய உல்லாசக் கச்சேரிக்குப்போய் அங்கு நடந்த தமாஷாக்களையும் பாணவேடிக்கைகளையும் பார்த்தார்கள்.

சௌஸதமாக்குவதைவிட வியாதியைத் தடுப்பது நலம்.

நல்ல தேகக்கட்டுள்ள ஒருமனிதன் பிளேக், அம்மை, காலரா, நுரையீரல் முதலிய வியாதிகளுக்குப் பயப்படவேண்டியதில்லை. வியாதி எப்பொழும் பலஹீனமுள்ளவர்களைப் பீடிக்கிறது. அவ்விதமுள்ளவர்களுடைய தளர்ந்த நரம்புகள் அதைத்தாங்குவது கஷ்டம்

SCOTT'S EMULSION.

ஸ்காட்ஸ் எமல்ஷன் வியாதியைத்தடுத்து சரீரத்தில் தளர்ந்தநரம்புகளைப் பலமுள்ளவைகளாகவும், சதைகளைப்புஷ்டியுள்ளவைகளாகவும் செய்து வியாதி கிட்ட அண்டாமல் உனக்குச் சக்தியைக் கொடுக்கிறது.

மருந்து உட்கொண்ட பின் இதன் அனுபவம் தெரியும்,

கையினால் தொடப்படாமலே செய்யப்படுகிறது,

எல்லா ஔஷத சாலையிலும் விலைக்கு பெற்றுக்கொள்ளாம்
ஸ்காட் அண்டு பௌன் கம்பெனி லிமிடெட்.

தயார் செய்கிற ரசாயன கர்த்தர், லண்டன் இங்கிலாது,

நோயாளிகளுக்குத் தாதித் தொழில் செய்வதிலேயே தமது வாழ்நாள் முழுமையும் கழித்துவிட்டு காலஞ்சென்றுபோன மிஸ் ப்ளோரேன்ஸ் நைட் டிங்கேல் இந்தியாவில் எந்த நற்காரியத்துக்காகவாவது செலவு செய்யப் படட்டுமென்று 250 பவுன் எழுதி வைத்துப் போனதாகவும் அத்தொகை அந்த அம்மாள் எழுதி வைத்த உயிலை நிறைவேற்றி வைக்கப்போகிறவர் களால் ஸர் வில்லியம வெட்டர்பரன் வசம் ஒப்புவிக்கப்பட்டிருப்பதாகவும் அறிகிறோம்.

———

தென் அமெரிக்காவில் ஒரு அதிசயமான வெள்ளைச் சாதியார் அனேக யுகங்களாக எங்கேயோ பதுங்கிக் கிடக்கிறுரென்று அங்கேயுள்ள ஜனங் கள் கதையாகச் சொல்லிக்கொள்வது வழக்கம். பூலோகத்தில் மறைந்து கிடக்கும் ஓர் சுவர்ண நகரத்தில் அவர்கள் வசிப்பதாகவும், எவராவது அந் நியர்கள் அந்நகரத்தை நெருங்கினுல் உடனே கொல்லப்படுவா ரென்றும் புராணமாக வழங்கிற்று. அமெஜான் நதிக்கரையிலுள்ள அமெரிக்கா சுதேசி கள மேற்கூறிய அந்த வெள்ளைச்சாதிய ரிருப்பதாகவே நிச்சயமாய் நம்பு கிறுர்கள். மேஜர் பாஸெட்டு என்பவர் தென் அமெரிக்காவைச் சுற்றிப் பிர யாணஞ் செய்து இப்போது அச்சாதியார் இருப்பதகவே சில அத்தாக்ஷி கள் எடுத்துக்காட்டுகிறுர். இவ்வத்தாக்ஷிகளைக் கொண்டுதான் அச்சாதியார் எங்கெங்கே இருக்கிறுர்க ளென்பதையும் அவர்கள் நடையுடைபாவனைகளை யும், அறியும் பொருட்டு முதன் முதலில் பிரயத்னஞ் செய்ய காரணங்கள் இப்போதுதான் ஏற்பட்டிருக்கின்றன.

———

ஸர் வில்லியம் ராம்சே என்பவர் இப்போது கண்டு பிடித்திருக்கும் தராசு மிகவும் நுட்பமானது. ஸ்படிகசம்பந்தமான ஓர் வஸ்துவால் செய்யப் பட்ட மயிர் போன்ற மெல்லிய இழைகளால் சிறு தராசுக்கோலிலிருந்து ஒரு தட்டு தொங்க விடப்பட்டிருக்கிறது. பூமிக்கடியில் ஓர் அறையில் இதற் குப் பிரத்தியேகமாய்ச் செய்யப்பட்ட ஓர் பெட்டியில் அது வைக்கப்பட் டிருக்கிறது. அது வைக்கபபட்டிருக்குமிடத்திலிருந்து ஆறு அடி தூரத்தில் அதன் நிறை அளவிடப்பட்ட கோல் இருக்கிறது. அந்தத் தராசில் வைக் கப்பட்டிருக்கிற ஒரு சிறு நிலக்கண்ணுடியிலிருந்து வெளிச்சம் வந்து அந்த நிறை கோலில் அடிக்கும். அந்தத் தராசுக்கோல் எவ்வளவு கொஞ்சமாய் அசைந்தாலும், அந்த நிறைகோலில் அடிக்கும் வெளிச்சமும் அதற்குச் சரி யாய் அசைந்து அளவைக் குறிப்பிடும். சிறு புட்டியிலிருந்து ஒருவித வாயுவை எடுத்து நிறுத்தபோது, அது ஒரு அவுன்ஸில் 70-கோடியில் ஒரு பாகம் நிறையுள்ளதென்று அந்த அதிசயமான தராசில் காணப்பட்டது.

———

தென் அமெரிக்காவில் அதி உஷ்ணமான பாகங்களில் மழைபெய்யும் மரங்களிருக்கின்றன. இந்த மரம் 60-அடி உயரம் வளரும். அதன் இலைகளு க்கு காற்றிலிருக்கிற ஈரத்தைக் கிரகித்து ஜலமாக்குகிற சக்தியிருக்கிறது. நீண்ட கிளைகளிலிருக்கிற இலைகளெல்லாம் இவ்விதம் ஈரத்தைக்கிரகிப்பதால் சதாகாலமும் ஜலத்துளிகள் கொட்டிக்கொண்டே யிருக்கின்றன. ஆகையால் அந்த மரத்தைச்சுற்றிலுமுள்ள பூமியெல்லாம் சேருய்ப்போவதால் அங்கே இதர புல் பூண்டுகள் செழிப்பாய் வளருகின்றன காய்ந்துபோன பொட்டை வெளிகளாயிருக்கவேண்டிய இடங்களில் இவ்விதம் செழிப்பான விருக்ஷ வர்க்கங்களைக் காண்கிறோம்.

சென்ற 200-வருஷங்களாக ஜாம்நகர் மகாராஜா அரண்மனையின் பரம்பரை வைத்தியப் பண்டிதர்களின் குடும்பத்தில் உதித்தவர்.

வைத்தியருக்கு ஏன் வீணாகப் பணம் கொடுக்கிறீர்கள்.

உலகமெல்லாம் பிரசித்திபெற்ற எங்களுடைய

மதனமஞ்சரி மாத்திரைகள்.

வாங்கி உபயோகியுங்கள் இந்த மாத்திரைகள் தங்கம் போன்றவை.

ஆண் பெண் இருபாலரும் வியாதியிருந்தாலும் வியாதியில்லாது போனாலும் வாஙகிப்புசிக்கலாம். தேகத்துக்குப் பலமும் நரம்புகளுக்கு வீரியமும் கொடுப்பதில் இதைவிடச் சிறந்த ஔஷதம் வேறில்லை.

இவை சிறிதாகவும் ருசியாகவும் இலகுவில் சாப்பிடக்கூடியவையும் ஒரு நாளைக்கு இரண்டு மாத்திரை யாதொரு பத்தியமு மில்லாமல் குமரர் முதல் கிழவர் வரை யாரானாலும சரியே, எக்காலத்திலும் எத்தேசத்திலும் சாப்பிடலாம்.

இவை (1) இரத்தத்தை சுத்திசெய்து, அதிகப்படுத்தும்.

(2) சகல விதமான நரம்புத் தளர்ச்சியையும் நீக்கி மூளையை குளிர்ச்சியடையச் செய்து ஞாபகசக்தியை பலப்படுத்தும், மூத்திர சம்பந்தமான சகல வித நோய்களையும் பறக்கடிக்கும்.

(3) உடம்பைச் சௌக்கியமும் பருமனும் அடையச்செய்யும்.

(4) புருஷத்துவத்தையும் வாலிபப்பருவத்தையும் கொடுக்கும்.

(5) வயிறு சம்பந்தமான சகல நோய்களையும் போக்கி கஷ்டமில்லாமல் மலத்தை வெளிப்படுத்தும்.

(6) கிழப்பருவம் வாரதபடி காத்து, இழந்துப்போன வாலிபத்தை கொடுக்கும்.

(7) மேகம், மது மேகம், பித்தக்குடு முதலிய சகல கொடிய நோய்களையும் வேருடன் போக்கும்.

(8) ஜனனேந்திரியங்களுககுப் பலத்தையும் வலுவையும் கொடுக்கும்

40 மாத்திரைகள் அடங்கிய ஒரு டின் விலை ரூ 1. தபால்சார்ஜ் பிரத்தியேகம்.

மேலே சொல்லிய மருநதுகளைப் பற்றயும் இன்னும் எங்களிடமுள்ள சிலாக்கியமான வேறே மருந்துகளைப் பற்றியும் எங்கள் வைத்திய வித்தியா புஸ்தகத்தை வாசியுங்கள். அது சுகத்துக்கும், ஐசுவரியத்துக்கும் க்ஷேமத்துக்கும் பெரிய வழிகாட்டியாகும்.

இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, குஜராத்தி, இந்தி, பெங்காளி, மராட்டி, இந்துஸ்தானி, முதலிய எந்தப்பாஷயில் வேண்டுமானாலும் இந்தப் புஸ்தகத்தை இனாமாக நாங்களே லேபில் ஒட்டியனுப்புவோம்.

லக்ஷக்கணக்கான புஸ்தகங்கள் இதுவரை செலவாயிருக்கின்றன.

ஜாம்நகர் மகாராஜா எமது மருந்துகளைக் குறித்து முதல்திற நற்சாட்சிப்பத்திரம் கொடுத்திருக்கிறார்கள். பெனாரிஸ் இண்டஸ்டிரியல் எக்ஸிபிஷனில் மெடலும் முதல்திற சர்டிபிகேட்டும் அளிக்கப்பட்டிருக்கின்றன.

ராஜவைத்திய நாராயணஜி கேசவஜி,
புரொப்ரைடர் ஆயுர்வேதோதய ஔஷதாலயா,
No 177, சைனாபஜார்ரோட் ஜமேதார் காட்டுக்கெதிரில் சென்னை.